விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A தட்டாரத் தெரு கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு கொழும்பு.

Phone 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புதுதகம 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 17உ திங்கட்கிழமை — Colombo, November 3 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 19 | இதழ் 153

தெ. மே. ஆபிரிக்காவில் தர்மகர்த்தா ஆட்சி ஏற்படுத்த இந்தியா தீர்மானம்

ஆசிய மக்கள் ஆளும் திறன்பெறும் வரைக்கும் சர்வதேசப் பாதுகாப்பில் வைத்திருப்பதே முறை

ஆபிரிக்க பிரதிநிதிக்கு இந்தியா கொடுத்த அதிர்ச்சி

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியின் வெற்றி

லேக்ஸ்க்ஸஸ், (நியூயார்க்,) நவ 2

தென் மேற்கு ஆப்பிரிக்காவுக்கு ஒருதர்மகர்த்தாவை ஒப்பந்தத்தை தென் ஆப்பிரிக்கா, நேசதேச ஸ்தாபனத்தின் பொதுச்சபையின் பரிசீலனைக்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்தியாவால் கொண்டுவரப்பட்ட தீர்மானம், நேற்று நடைபெற்ற நேசதேச ஸ்தாபனத்தின் பொதுச் சபையில 31 வாக்குகளால் வெற்றி பெற்றது. 41 வாக்குகள் தீர்மானத்திற்குச் சாதகமாகவும், 10 வாக்குகள் பாதகமாகவும் அளிக்கப்பட்டன.

நால்வர் வாக்களிக்க மறுத்துவிட்டனர். இத்தீர்மானத்தை ஆதரித்தும், அடுத்த பொதுச் சபைக் கூட்டத்திற்கு கால வசதி அளிப்பதற்காக முன் கூட்டியே, தென் மேற்கு ஆப்பிரிக்கா தர்மகர்த்தா பரிபாலனத்தில் வைக்கப்படல் வேண்டும் என்றும், தென் ஆப்பிரிக்கா அரசாங்கம் அத்தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டுமென்றும் ஒரு திருத்தப் பிரேரணையை டென்மார்க் பிரதிநிதி கொண்டுவந்தார். இத்திருத்தப் பிரேரணைக்குச் சாதகமாக 36 வாக்குகளும் பாதகமாக 9 வாக்குகளும் கிடைத்தன. 7 நாடுகள வாக்களிக்காது மௌனஞ் சாதித்திருந்தனர்.

ஆஸ்திரேலியப் பிரதிநிதியாகிய டாக்டர் ஈவாட், இத்தீர்மானத்தையிட்டுப் பேசியபோது "இச்சபை இவ்விதமான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அருவறுப்புக் காட்டவேண்டும் என்றும், தென் ஆப்பிரிக்க யூனியன் செய்தவற்றை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளவேண்டு"மென்றும் கூறினார்.

தொடர்ந்து டாக்டர் ஈவாட் சொன்னதாவது:-

"தென் ஆப்பிரிக்க யூனியன் நேசதேச ஸ்தாபனத்தின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு எவ்வளவோ தூரம் முன் வந்திருக்கிறது."

டாக்டர் ஈவாட், தளபதி ஸ்மட்ஸைப்பற்றிக் குறிப்பிட்டபொழுது "நேச நேசதேசங்களின் பெருந் தலைவர்களில் ஒருவரென்றும், சர்வதேச மகாநாட்டை உருவகப்படுத்திய முக்கியஸ்தர்களில் ஒருவரென்றும்" புகழ் மாலை சூட்டினார்.

மத்தியானப் போஜன இடைவேளை நேரத்தில் இந்தியப் பிரதிநிதிகளின் தலைவராகிய ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிற் தாமே இவ்விவாதத்தை நடத்தவேண்டுமென்று, டாகடர் ஈவாட்டின் இடையீட்டால் தீர்மானித்தார். இதற்கு முன் இந்தியா சார்பாக பேசியவர் ஸர் மகாராஜா சிங் ஆவர். ஸ்ரீமதி பண்டிற் நேசதேச சபையில் பேசும்பொழுது, "தென் ஆபிரிக்கா, தென் மேற்கு ஆப்பிரிக்காவை தர்ம கர்த்தா ஆட்சி முறையில் வைப்பதற்கு ஒருவிதமான ஒழுக்கக்கட்டுப்பாடும் தப்பாமல் பொறுத்திருக்கவில்லை என்று கூறுவது ஆச்சரியமானதாகும்" என்று கூறினார்.

தொடர்ந்து ஸ்ரீமதிவிஜயலக்ஷ்மிபண்டிற் தெரிவித்ததாவது:-

"ஒழுக்க முறையின்படியோ, சட்டத்தின்படியோ, தென் மேற்கு ஆப்பிரிக்காவை, தர்ம கர்த்தா பரிபாலனத்தில் வைப்பதற்கு தென் ஆப்பிரிக்க யூனியனுக்கு ஒருவிதமான பொறுப்புமில்லை என்று விவாதிக்கப்படுகிறது. அவ்வரசாங்கத்தின் செயலையிட்டு எவ்வித ஆட்சேபனையும் செய்துகொள்ள முடியாதென்றும் கூறப்படுகிறது.

"நான் ஒன்றுசொல்லவிரும்புகிறேன். சென்ற 30 வருடங்களாக சர்வ தேசிய தர்மகர்த்தா ஆட்சி முறையை ஏற்படுத்தச் செய்து வந்த பிரமப் பிரயத்தனங்கள் யாவும் ஒரே அடியில் அகற்றப்பட்டு, நாம் முன்னேறி வந்த வழிகளில் பின்னோக்கிச் செல்வதாகவே முடியும்"

"டாக்டர் ஈவாட், தளபதி ஸமட்ஸுக்கு பெரும்புகழ்மாலை சூட்டியுள்ளார். இச்சர்வ தேச ஸ்தாபனத்தைஉருவாக்குவதில் அவர் முக்கிய பங்கெடுத்திருக்கிறபடியால் நானும் அவருக்குப் புகழ்மாலை சூடுவதில் பங்கு பற்றுகிறேன்.

"இத்தென்மேற்காப்பிரிக்கப் பிரச்னையை முற்றாக தளபதி ஸ்மட்ஸிடம் விட்டுவிடுவோமென்றுடாக்டர் ஈவாட் கூறியிருக்கிறார். இப்பிரச்னை நேரடியாக ஒருவர் பரிசீலனை செய்வதற்கு மேற்பட்டதாகும். ஒரு பெரியாருக்காக தென்மேற்கு ஆப்பிக்காவிலுள்ள பல ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்கர்களின் தலைவிதியை மறந்துவிடக் கூடாது. தென் மேற்கு ஆப்பிரிக்கர்கள் இந்த ஸ்தாபனத்தையே தங்கள் நலன்களைப் பாதுகாத்துத் தரும்படி எதிர்பார்த்திருக்கிறார்கள்.

"உலகப் பகுத்தறிவின் மேற்பார்வையில், சர்வதேச ஸ்தாபனத்தின் பாதுகாப்பில் பிற்போக்குள்ள சில மக்களை பராமரிப்புக்கு விடுவதே தர்மகர்த்தா ஆட்சிமுறையின் சத்தாகும்.

"ஆசிய மக்கள் தங்கள் நாடுகளை தாங்களே ஆளுந்திறன் வரும் வரைக்கும் சர்வ தேசியப் பாதுகாப்பில் வைத்திருப்பதே உகந்ததாகும்.

இவ்வித தர்மகர்த்தா ஒப்படைப்பின் நோக்கம் சர்வ தேசியப் பாதுகாப்பாகும்.

ஒரு சாசனம் எனப்படுவதில் அதன் நோக்கம் அழிக்கப்பட்டு விட்டால் அது சொற்குப்பையாகத்தானே இருக்கும் என்பதை இங்கு உணர்த்த விரும்புகிறேன்.

ஸர். மஹாராஜாஸிங் பேசியபோது, "கிழக்கு தெற்கு ஆப்பிரிக்காவில் ஆப்பிரிக்கர்கள் கண் விழித்து விட்டார்கள்; அங்கு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதால் இப்பொழுது அங்குள்ள நிலையில் அவர்களை அடக்கி வைத்திருக்க முடியாது எனக் கூறினார்.

தென் ஆப்பிரிக்கப் பிரதிநிதி திரு. ஹரி லோரன்ஸ் பின்வருமாறு பதில் தெரிவித்தார்:-

"எனக்குமுன் னவர்பேசிய பேச்சு எங்களைப் பயமுறுத்தப் பேசியதோ என்பது தெரியவில்லை. நான் என் தேசத்தின் க்ஷேமத்தில் அக்கறை உள்ளவன். ஒரு பிரதிநிதி தம் வழியைவிட்டு தென் ஆப்பிரிக்காவன் சொந்த வீட்டு விஷயங்களையிட்டுக் குறைகூறி ஆங்குள்ள விஷயங்களைத்திரித்தும்புனைந்தும்பொய்யானவற்றை எடுத்துக் காட்டுவதாயிருந்தால் நான் உலக மேடையில் மௌனஞ் சாதித்திருக்க முடியாது.

"ஸர். ஸிங்கின் இடத்தில் இந்தியப் படைகளின் பிரதம ஸேனாதிபதியாகிய ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட திடீரென நிறுத்தப்பட்டதும், இப்பூகம்பம் போன்ற கடூரமான அதிர்ச்சியைத் தருகின்றதாகிய தென் ஆப்பிரிக்கா மீது இந்தியா கூறியுள்ள வசை புராணங்களை நான் நம்பியுள்ளேனென்று எவரும் குறை கூற முடியாது; குறை கூறவும் மாட்டார்களென்றே எண்ணுகின்றேன்."

ஏழரை மணித்தியால விவாதத்தின் பின்பு இந்தியப் பிரதிநிதி ஸர் மகாராஜாசிங் மீண்டும் மேடைக்குச் சென்று டென்மார்க் கொண்டு வந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுவதாக அறிவித்தார். திருத்தப் பிரேரணைக்குப் பாதகமாக பின்வரும் தேசங்கள் வாக்களித்தன:- அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, எல்சல்வடோர், கிரீஸ், நிக்காறகுவா, துருக்கி, தென் ஆப்பிரிக்கா, பிரிட்டன்.

[ராய்ட்டர்]

முனிசிப்பல் தேர்தல்களில் தொழிற்கட்சியின்படுதோல்வி

கொன்ஸர்வேட்டிவ் கட்சியினர் சவால்

ராஜிநாமாச்செய்து புதுத் தேர்தலுக்கு நிற்பார்களா?

லண்டன், நவ 2

நேற்று முடிவுபெற்ற முனிசிப்பல் தேர்தல்களில் வலதுசாரிக் கட்சியினர் அமோகமான வெற்றி பெற்று 650 ஸ்தானங்களைக் கைப்பற்றியதும், பிரிட்டிஷ் கொன்ஸர்வேட்டிவ் கட்சி, தொழிற்கட்சி அரசாங்கம் ராஜிநாமாச் செய்து புதிய பாராளுமன்றத் தேர்தலுக்கு நிற்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது.

இங்கிலாந்திலும் வேல்ஸ்லும் உள்ள முனிசிபல் சபைகளின் தேர்தல்கள் அநேகமாக முடிவடைந்துவிட்டன இதுவரை வெளியிட்டுள்ள முடிவுகளை நோக்குமிடத்து வலதுசாரிக் கட்சியே பலமுற்று நிற்கிறது.

காலை வெளியிடப்பட்ட அறிக்கையின்படி கன்ஸர்வேடிவ் கட்சிக்கு 631 ஸ்தானங்களும் தொழிற் கட்சிக்கு 42 ஸ்தானங்களும் லிபரல் கட்சிக்கு 46 ஸ்தானங்களும் சுயேச்சையினருக்கு 170 ஸ்தானங்களும்கிடைத்துள்ளன.

மொத்தமாக 376 இடங்களில் தேர்தல்கள் நடந்துள்ளன. கன்ஸர்வேடிவ் கட்சி இதுவரை 17 ஸ்தானங்களையும்தொழிற் கட்சி 631 ஸ்தானங்களையும் இழந்துள்ளது.

(ராய்ட்டர்)

பர்மியர்களின் ஆயுதந்தாங்கிய பொலிஸ் படையிலுள்ள 2000 பேர்களடங்கிய உத்தியோகஸதர்களும், பொலிஸாரும், பர்மாவின் பல பாகங்களிலும் நடக்கும் அட்டூழியங்களையும், பயங்கரக் கொலைகளையும் நீக்குவோமென இன்று வாக்குறுதி செய்துள்ளார்கள். (ராய்ட்டர்)

மேற்கத்திய நாகரீகம்

நல்லனவற்றைக் கடை பிடிக்க

களுத்துறை, நவ. 2

களுத்துறை ஞானோதயக் கல்லூரியின் தங்க விழாக் கொண்டாட்டம் கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டன. இக்கூட்டத்தில ஸர் பிரான்ஸிஸ் ஜூட்ஸ் பேசுகையில் இலங்கையின் சூழ் நிலைக்கு ஏற்றதெனக் காணபடும் மேற்கு நாடுகளின் நாகரீகம், கலாச்சாரம் முதலியவற்றை பின்பற்ற வேண்டுமேயன்றி மேற்கு நாடுகளின் நாகரீகங்களை அனுச்சாரமென்று கூறி அவற்றைக் கைவிட்டுவிடப்படாதென்றும் இவற்றில் நல்லனவற்றை கையாண்டுகொண்டு அல்லனவற்றை நீக்குதல் வேண்டுமென்றும் கூறினார்

பாரசீக ரயில்வே

ஏழு வருஷத் திட்டம்

டெஹ்ரான், நவ 2

பாரசீக ரயில்வே போக்குவரத்து அபிவிருத்திக்கு பிரதம மந்திரி கானும் எஸ். சுல்தானும் வகுத்த ஏழு வருடத் திட்டத்தினபடி பாரசீகம் முழுமையும் ரயில் போக்குவரத்து வசதிகள் செய்யப்படும். இத்திட்டத்தின்படி பாரசீகத்தில் வடக்குதெற்காகவுள்ள முக்கிய ரயில்பாதை "டப்ரிஸ்" என்னுமிடத்திற்கு நீடிக்கப்படும் வேலைகள் நடைபெறுகின்றன. புதிய பாதை விஸ்தரிப்பினால் பாரசீக ரயில்வே பாதை வடமேற்குப் பகுதியில் 95 மைல்களுக்கு மேலும் நீடிக்கும். [ராய்ட்டர்]

"ஸ்ரீதன முறையை ஒழியுங்கள்"

சமூக அரசியல் வாழ்க்கையில் பெண்களை பங்குபற்றச் செய்க!

யாழ்ப்பாண கல்லூரிபழையமாணவர்கள் சங்கத்தில் ஸ்ரீமதி ஆயிஷா ரஹூப் பேச்சு

கொழும்பு, நவ 2

யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கக் கூட்டம் கொழும்பு ஓய் எம். எ. ஏ. மண்டபத்தில் நேற்றிரவு நடைபெற்றது. கல்லூரி அதிபர் சங். சிட்னி கே பங்கர் தலைமைவகித்தார். அட்டார்னி ஜெனரல் திரு. அலன்ரோஸ பேசுகையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் முயற்சிகளைப் பாராட்டினார் அண்ணாமலைச் சர்வகலாசாலை தமிழ் ஆராய்ச்சிப் பகுதியைச் சேர்ந்த சங பிதா ஸேவியர் எஸ். தனிநாயகம் பேசுகையில், தமிழ்க் கலாசாரத்தைப் பரப்புவதில் யாழ்ப்பாணக்கல்லூரி புரிந்த சேவைகளை பாராட்டியதுடன், தமிழ்க் கலாசாரமே பெரிய ஸ்ரீதனமென்றும் கற்றறிந்த பெரியவர்களென அழைக்கப்படும் பலர் தமிழ்க் கலாசாரத்தை அறியாதவர்களாக இருக்கின்றனர் என்றும், தமிழர் சரித்திரத்தை அவர்கள் தெரியாது இருக்கின்றனர் என்றும் கூறினார்.

இக் கூட்டத்தில் ஸ்ரீமதி அயிஷா ரஹூப் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் நிலவும் ஸ்ரீதன முறையைப் பலமாகக் கண்டித்தார். அவர் கூறியதாவது:-

மிக மிக வெறுக்கப்படக் கூடிய ஸ்ரீதனமுறை எங்கள் குடும்பங்களில் பாழ்படுத்தும் ஒரு முறையாகவே இருக்கிறது. இக் கூட்டத்திலே பெண்கள் குறைவாக இருக்கின்றனர். இங்கு கூடியிருக்கும் ஆணகளை நான் கேட்டுக்கொள்வது, உங்கள் தாய்மார்களையும், சகோதரிகளையும், பிள்ளைகளையும் சமூக சேவை, அரசியல் வாழ்க்கை முதலியவற்றில் நேரடியான பங்குகளை ஏற்றுச் செய்வதற்கு அனுமதியுங்கள் என்பதே பெண்களை பொது வாழ்க்கையில் ஈடுபட விடாது தடுத்து வைத்திருக்கின்றனர். முஸ்லிம்களாகிய நாங்கள் எங்களை "பர்தா" ஸதிரீகளென அழைப்பது வழக்கம். ஆனால் யாழ்ப்பாணத்தில உங்களிடையே உள்ள நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது எனபது எனக்குத் தெரியும்.

ஸ்ரீதனத்தின் முறையில் உள்ள கேடுகள் அனந்தம். யாழ்ப்பாணத்தில் கையாளப்படும்முறை-பெண்மக்களை பணங் கொடுத்து வாங்குவதும் விற்பதும் போல இருக்கிறது.

இத்தகைய ஸ்ரீதனமுறையை கைவிட்டு விடும்படி இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வகையில் பணம் சேர்க்கும் ஆசையை விட்டுவிடுங்கள் ஸ்ரீதனவிவகாரத்தினால்எத்தனையோ இடங்களில் விவாகங்கள் தடைபட்டுள்ளன. உங்களுக்கு ஸ்ரீதனம் வேண்டாம் என்றும் உங்கள்வாழ்க்கையில் சந்தோஷத்தையும் இன்பத்தையும் நிலவச் செய்ய கற்றறிந்தபெண்களே துணை விகளாகவேண்டுமென்றும் பெற்றோருக்குக் கூறுங்கள். உங்கள் பெண்மக்களுக்கும் தகுந்த கல்வியறிவை ஊட்டுங்கள். அதனால் அவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க முடியும்"

தலைமை தாங்கிய கல்லூரி அதிபர் பேசுகையில் ஸ்ரீமதி ஆயிஷாரஹூப் பின் பேச்சைப்பாராட்டினார். இந்தச் செய்தி யாழ்ப்பாண இளைஞர்களின் மனச்சாட்சிக்கு வேலை கொடுக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

"உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்"

பிரதம மந்திரியின் உத்தரவு

1948-49 இலங்கையின் உணவு நிலைமை மிக மோசமாகவிருக்கும்

கொழும்பு, நவ. 3

இலங்கையின் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்கா, 1948-49-ம் ஆண்டுகளில் இங்குள்ள உணவு நிலைமை மிகக் கஷ்டமானதாக இருக்கும் என்றும், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியதற்கு ஆவனவெல்லாம் செய்ய வேண்டுமென்றும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரியார், உணவுப் பயத்தை மந்திரி சபையின் உப கமிட்டியில் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

இலங்கையில் நீர்ப்பாசன வசதிகள உள்ள 900,000 ஏக்கர் வயற் செய்கை நிலங்களிலுமிருந்து உயர்ந்த தொகையான நெல்லை இவ்வருடங்களில்பெறுவதற்கான வேலைகளை இப்பொழுதே செய்யுமாறு திரு டி. எஸ். சேனநாயக்கா அறிவித்தல் கொடுத்துள்ளார். இன்னுமசிறிய பெரியநீர்ப்பாசனத் திட்டங்களையும் உடனே பூர்த்தியாகுமாறும் உத்தரவிட்டுள்ளாராம்.

புதிய நிலங்களை உணவு நிலைமையைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் பண்படுத்தச் செய்வது, அதிகம் நெல்லைத் தருவதுமல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தையும், குடியேற இடமில்லாதிருப்பவர்களின் கஷ்டத்தையும் நீக்கும் என்று திரு. சேனநாயக்கா கருதுகிறார்.

நீர்ப்பாசன வசதிக்குட்பட்ட நிலங்கள், அரசினரதும் அல்லது பொது மக்களினதுமாகிய சகல வயற்செய்கை நிலங்களையும உடன் பண்படுத்த வேண்டும் என்றும், 1949-ம் ஆண்டுக்குள் அவ்வேலைகள் முடிவுபெற வேண்டும் என்றும் விவசாய மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா அறிவித்தாராம்.

இருவர் குடியிருக்க வீடுகள் நாட்டிற்குபலலக்ஷம்ரூபாதுண்டு

மந்திரிகளுக்கும் வீட்டுவசதி செய்ய ஆலோசனையா?

[நமது சொந்த நிருபர்]

கொழும்பு, நவ. 3

இரண்டு லட்சம் ரூபாய் செலவில் அரசாங்கம் பிரதம மந்திரி வாசம் செய்வதற்காக "டெப்பின் ட்ரீலை" என்னும் கிருகத்தைக் கொடுத்துள்ளது. பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் மூன்று லட்சம் ரூபாயில் ஒரு "கிளப்" ஏற்படுத்த விருக்கின்றது. இப்பொழுது பிரதிநிதிகள் சபையின் தலைவர் (ஸபீக்கர்) அவர்களுக்கும் ஒரு உத்தியோகபூர்வமான வாசஸ்தலம் கொடுபடவிருக்கின்றதாம்.

கொழும்பில் முன் யுத்த காலத்தில், இலங்கையின் பிரதம தளகர்த்தர் ஸர். ஜியோபரி லெயிட்டன் வாசஞ் செய்த "மும்தாஜ் மஹால்" என்னும் கட்டிடத்தை வாங்கி பிரதிநிதிகள் சபையின் தலைவருக்குக் கொடுக்கஅரசாங்கம்உத்தேசித்துள்ளதாம். இதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

இச் செயல் இலங்கையின் பொக்கிஷத்திற்கு எத்தனை லட்சத்தைத் துண்டு விழுத்துமோ தெரியவில்லை.

பிரிட்டனிலுள்ள பொது மக்கள் சபையின் தலைவருக்கு, அச்சபையின் கட்டிடத்தில் ஒரு சாதாரண வீடும், ஒரு "கோச்" வண்டியுமே கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆயின் இங்கு வீட்டுடன் ஒரு திறமான மோட்டார்வண்டியும் கொடுக்கப்படுகிறது. பிரதம மந்திரியாருக்கும் ஒரு மோட்டார் வண்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மந்திரிகளுக்கும் கொழும்பில் வீட்டுவசதிகள் செய்ய வேண்டுமென ஆலோசனை கூறப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

பொருள் வருவாய் குறையும் நேரத்தில் இவ்விதம் அரசாங்கம் வீண் செலவுகள் செய்வது உகந்ததல்ல என்று எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர்.

மாஜி யுத்த வீரருக்கு வேலை கொடுக்க மறுத்ததாக வழக்கு

எதிரி விடுதலை செய்யப்பட்டார்

கொழும்பு, நவ. 1

மாஜி யுத்த வீரர் ஒருவர் தமக்கு உத்தியோகம் கொடுக்க ஸர். ஜி. விஜயக்கூன் மறுத்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு திரு. பண்டித குணவர்தனா முன் விசாரணை செய்யப்பட்டது. ஜே. எச். ஜேம்ஸ் என்னும் மாஜி யுத்த வீரர் யுத்தத்தில் சேருமுன் ஸர். விஜயகூனிடம் வேலைபார்த்ததாகக் கூறப்பட்டது. யுத்த முடிவில் அவர் தமக்கு வேலைதர மறுத்துவிட்டதாக ஜேம்ஸ் தெரிவித்தார். விசாரணை முடிவில் நீதிபதி ஸர். ஜி. விஜயக்கூனை விடுதலை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 5, தட்டாத் தெரு, கொழும்பு.
போன: 3411.

சந்தாத்தொகை ஐப்பசி மீ 17உ
திங்கட்கிழமை

உண்மைச் சுதந்திரம்-4

வருங்காலத்தில் இலங்கைத் தமிழ்த் தலையில் சீப்புவைத்து பெயரை மாற்றிக்கொண்டு சிங்களத் தமிழ் பேசிக்கொண்டு யாழ்ப்பாணத் தெருக்களில் போவதைக் காண நேரிடும் எனக் குறிப்பிட்டிருந்தோம். சுயநலம் பிடித்த தலைவர்கள் உள்ளவரையில இப்படித்தான் நடக்கும் என்பது உண்மை. தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் தலைவர்கள், தாங்கள் ஊர் திரும்பும்போது பூமாலை போட்டு வரவேற்க ஆடகள் நியமிப்பதும், தங்களுக்கு விருந்தளிக்க வேண்டி முன் கூட்டியே கடிதங்கள் போட்டு ஏற்பாடு செய்வதும் இவ்வாறு ஏற்பாடுகள் செய்வதில யார் முதலில் செய்வது யார் பிறகு செய்வது என்பதில் போட்டி ஏற்படுவதும் காட்சியாய் விட்டது.

தலைவர் என்பது பொது மக்களின் அரசனல. பொது மக்களின் ஊழியன். இவர்கள் செய்வது உண்மையான ஊழியம் என்பதையுணர்ந்து மக்கள பூமாலைகள் போட்டு வரவேற்க வேண்டுமேயொழிய தன் பணத்தை இரகசியமாய்க்கொடுத்து பூமாலை வாங்கிப் போடச் செய்வது பொது மக்களை ஏமாற்றுவதாகும். மகாதமா காந்தியடிகள் எங்கேயாவது போனல் முன்னதாக அறிவித்து பூமாலை போடச் செய்கிறாரா? இல்லை. காரணம் என்ன? அவர் தியாக மூர்த்தி. தலைவர்கள் எனப்படுவோர் இவ்வித உணர்ச்சியை மக்களிடம் உண்டாக்க வேண்டும்.

பேசும் காலத்தில் பிரமாதமாகப் பேசிவிட்டு காரியங்களைச் செய்யும் காலத்தில மோசமான முறையில் நடப்பவர்கள் கூடிய சீக்கரம் மக்களால் கண்டு பிடிக்கப்பட்டு போவார்கள். இதனைத் தலைவர்கள் உணர வேண்டும். திரு. பண்டார நாயக்கா யாழ்ப்பாணம் சென்றார். அவருக்குச் சாப்பாடு கொடுப்பதில் போட்டி. யார் முன கொடுப்பது, யார் பின் கொடுப்பது என்பதில சண்டை. யாராவது ஒரு ஏழை சோறு கேட்டால அவனைத் தடி கொண்டு அடித்துத் துரத்தும் கூட்டத்தவர்கள் இவர்கள். பண்டார நாயக்கா மந்திரிப் பதவியில்லாதிருந்தால அவரை வரவேற்க இவ்வளவு போட்டியிருக்குமா என்றதான் கேட்கிறோம். மந்திரியை வரவேற்றோம் என்ற பெருமைவேண்டி இக்காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. நான் பிடித்த காரியத்தைச் செய்து விட்டேன் என்றதைக் காட்டிக் கொள்ள இது நடந்த காரியம் இதனல் யாழ்ப்பாணம் மக்களுக்குக் கிடைத்ததென்ன? அவன் வில்லனப்பா, காலில் விழுந்தாவது சமயத்தில் தன் காரியத்தை முடித்துக் கொள்வான் என்று தெருவில்போகிறவன் பேசிக் கொள்வதைத்தான் கேட்கலாம்.

இந்நிலையில் பண்டார நாயக்கா சொன்னதென்ன? இவர் சிங்கள சபா கடசினர். தான் "சிங்களவர்களில் சிங்களவர்" என்கிறார். அதாவது வடிகட்டி எடுத்த சிங்களவர் என்பது போலும் இலங்கையின் அபிவிருத்திக்கு தமிழனுடையவும், சிங்களவனுடையவும் ஒத்துழைப்பு வேண்டும் என்கிறார். அது உண்மை. இந்நாட்டு மக்கள் ஒற்றுமைப்பட்டு முதலால் தான் நன்மையுண்டாக்க முடியும். அப்படிச் செய்ய திரு பண்டாரநாயக்காசெய்யவேண்டியது என்ன? வடிகட்டின சிங்களத் தலைவர்களும் வடிகட்டின தமிழ்த் தலைவர்களும் சேரவேண்டும என்பதை அவர் உணர்ந்து நடப்பார் என எண்ணுகிறேன். வடிகட்டின சிங்களவரும் வடிகட்டப்படாத தமிழரும் சேர்ந்தால் என்னவாகும்?

நல்ல ஆகாரம வேண்டின் ருசியானதும், உடலுக்குப்பலம் அளிக்கக் கூடியதுமான ஆகாரம் வேண்டின் சுத்தமான சாமான்கள கலந்து சமையல் செய்ய வேண்டும நல்ல அரிசி, நல்ல பருப்பு, நல்ல மிளகு, நல்ல சீரகம், நல்ல உப்பு, நல்ல தண்ணீர் கலந்தால்தான் நல்ல பொங்கல் கிடைக்கும் அரிசி பெரும்பாகம் போடவேண்டியிருக்கலாம். அக்காரணம்பற்றி கல்லும் மண்ணும் கலந்து சோக்கலாமா? பருப்பு குறைந்தளவுள்ளதாயிருக்கலாம். அக்காரணம் பற்றி பூச்சிபிடித்த சாமானைச் சேர்க்கலாமா? மிகச் சிறிய அளவுதானே என்று மிளகையோ சீரகத்தையோ வேண்டாம் என்று விடலாமா? எல்லாம் நல்ல சாமானுக, போதியஅளவு கொண்டதாக, வேண்டப்படுவை மிகச் சிறிய அளவெனினும் அவற்றையும் விடாமல் சேர்த்து சமைத்தால்தான் நாக்கிற்கு ருசியும், உடலுக்குச் சுகமும் கொடுக்கும்.

அவ்விதம் இல்லாமல், அரிசிதானே முக்கியம் என்று கறுப்பும் வெள்ளையுமாகக் கலந்த அரிசி, குறைந்தஅளவு பருப்புதானே என்ற அலட்சியத்தில் துறைமுகத்தில் பல மூட்டைகளிலிருந்து பிரிந்து விழுந்து தெருக்களில் விற்கப்படும் பல வகைப் பருப்புகள் கொண்ட ஒரு கலவன் பருப்பு, மிளகுக்குப் பதிலாக மிளகாய் போடுவோம், சீரகம் நமக்கு அனுவசியம் என்று எண்ணி ஒருவன் சமைப்பானேயாகில் அந்தச் சோற்றை நாய்தான் தீண்டுமா என்று கேட்கிறோம். அதுபோல் நமது திரு. சேனநாயக்கா சேர்த்துள்ள "கூட்டாஞ் சோற்று" மந்திரிசபையிருக்கிறது என்பதை உலகம் அறியும். இதனைத் தமிழன் நனகறிவான். இந்த விதமான சோற்றைச் சாப்பிடும் குணமுடையவனல்ல தமிழன். அந்தச் சோறு பலனில்லை யென்று கோபித்துக்கொண்டு சும்மாவிருக்கலாமா? பட்டினி கிடக்கலாமா என்று கேட்கலாம்.

தமிழன் பட்டினி கிடக்கத் தேவையில்லை. தன் கையில் எல்லாம் உண்டு. அதனை அவன் உணர்ந்து உண்மையுடனும், நேர்மையுடனும் நடந்துகொண்டால், ரேகுத் துறையில் கூட்டி எடுக்கக்கூடிய பருப்பும் இல்லாமற் செய்து, நல்ல கடையில் நல்ல பருப்பு வாங்கிச் சமைக்கும்படியாக திரு. சேனநாயகாவைச் செய்துவிடலாம் என்பது எமது துணிபு. தமிழன் அதற்குத் தயாரா?

ரம்யமான காஷ்மீரத்தை காப்பாற்ற உயிரையும் விடத் தயாராயிருங்கள்

பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா பேச்சு

புதுடில்லி, நவ. 1

இன்றிரவு மகாத்மா காந்தி டெல்ஹியில் தமது பிரார்த்தனைக் கூட்டத்தின்பின்பு பேசிய போது "காஷ்மீரில் இருந்து பயம் கொண்டு ஓடுபவர்கள் அவ்விதம் செய்தல் ஒண்ணது" என்று கூறினர்.

மகாத்மா மேலும் சொன்னதாவது:- "மனிதர் பயமற்றவர்களாயும், பலவான்களாயும் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தங்கள் தங்கள வீடுகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தம் உயிரையும் விடத் தயாராக இருக்கவேண்டும்.

"ரம்யமான காஷ்மீர் நகரத்தைப் பாதுகாப்பதில் அங்குள்ள சகல ராணுவப் படைகளும், எல்லா மகளும் தங்கள் இடங்களில் இறந்தாலும் நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன்"

விமானத்தில் பிறந்த குழந்தை

புதுடில்லி, அக். 31

மூல்டானிலிருந்து அம்பாலாவுக்கு நேற்று அகதிகளை ஏற்றி வந்த ஒரு விமானத்தில் ஒரு அகதிக்கு ஒரு குழந்தை பிறந்ததாக இங்கு செய்தி வந்துள்ளது. 6000 அடி உயரத்தில விமானம் பறந்து கொண்டிருக்கும் பொழுதே இந்த பிரசவம ஏற்பட்டது. தாயும் குழந்தையும் சௌகரியமாக இருக்கிறார்களாம்.

யூ. என். பி. முதலாளிகளின் துவேஷ நாடகம்

சிங்கள, தமிழ், முஸலிம் சமூகங்கள், சுரண்டுவோரிடமிருந்து காப்பாற்றப் படல் வேண்டும்?

ஜாதிப் பிரிவினையை ஒழித்துக் கட்டுங்கள்!

தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில் பௌத்த பிக்கு பிரசன்னம்

நேரிற் பார்த்தவர் தெரிவிக்கும் உண்மை

முதலாளி வர்க்கம் என்று சொலலப்படும் ஒரு கட்சியார் விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டினமாதிரி யூ. என. பி என்றபட்டை நாமம் சூட்டி தேசியக் கட்சி, தேசியம் தேசியம் என்று பறைசாற்றி ஏழைத் தொழிலாளரை உய்யவிடாது சுரண்டி அடிமைத் தளையில் பூட்டி அடிக்கிறார்கள். ஆனல் அவர்களின் சுரண்டல் இனனும் பூரணமாகாதது கண்டு வெருளுகின்றனர்.

இலங்கையர்

சிங்களவர், தமிழர், சோனகர் பறங்கியர் என பலசாகியதாரும இலங்கையில் தோன்றி இலங்கையராகத் திகழ்கின்றனர் இவர்களுள் சிங்களவர் பெரும்பான்மைச் சமூகமாகவும் மற்றையோர் சிறுபான்மையோராகவுமிருக்கின்றனர். எப்படியிருப்பினும் இவர்கள் எல்லோரும் இலங்கையர்களேயாவர்.

உரிமை

சிங்களவர் பெரும்பான்மையினராயிருப்பதால் இலங்கையின் முழு உரிமையும் சிங்களவர்களுகேயுரியதென்றும் ஏனையோர் தங்கள் அடிமையென்றும் அடிமையாயிருக்க விருப்பமின்றேல் வந்த வழி பார்த்து போக வேண்டியதுதான் என்றும் இந்தமுதலாளிவர்க்கம் கர்ஜனை செய்து மற்ற சிங்கள மகளைத் தட்டிக் கொடுக்கின்றார்கள். பெரும்பான்மை உரிமை சிறுபான்மை உரிமையென்றும் ஒன்றில்லை எல்லோரும் இலங்கையர் என்ற மட்டில் சம உரிமை உடையவர்களேயாவர். இலங்கையர் எவர்க்கும் இலங்கையை விட வேறொரு புகலிடம் கிடைக்கவே கிடையாது.

சூழ்ச்சியின் மர்மம்

சுரண்டுவோராகிய இந்த முதலாளி வர்க்கம் சிங்களவர், தமிழரென்ற பாகுபாட்டை உண்டாக்கி இரு ஜாதியாரையும் பிரிப்பதற்கு எனனென்ன சூழ்ச்சிகளையெல்லாம் கையாளக்கூடுமோ அவற்றையெல்லாம் கூசாது கையாண்டு வருகின்றார்கள். தமிழரிலும் தமிழர் ஸதாபனமாகிய தமிழ்க் காங்கிரஸிலும் அவர் தலைவரிலும் இல்லாத அபாண்டங்களையெல்லாம் கக்கி மற்றும் சிங்கள மக்களுக்கு ஆவேசத்தைக் ஊட்டிவிடடால் இலங்கை வாழ் சிங்கள சமூகம் தங்களைப் பின்தொடருமென்றும் அங்ஙனம் அவர்கள் பின்தொடர்ந்தால் மற்றும் சிறுபான்மையினரை அடிமைகளாக்கிக் கொள்ளலாமென்றும் மனப்பால் குடிக்கின்றனர்.

வகுப்புவாதம்

ஒரு சாதியாருக்கு ஓர் ஸ்தாபனமிருப்பது எங்ஙனம் தவறாகும். சிங்கள சமூகத்திற்கு சிங்கள மகா சபையென்றொன்றில்லையா, அதை எந்தத் தமிழன் எதிர்த்தான். முஸ்லிம்களுக்கு பறங்கியருக்கு ஸ்தாபனங்களில்லையா சாகிய சம்பந்தமான ஓர் ஸ்தாபனமிருப்பது வகுப்புவாதமாகுமா. சாகிய சம்பந்தமான ஸதாபனங்களின் மூலம் பாராளுமன்றம் பிரதிநிதிகள் தோன்றுவது எங்ஙனம் வகுப்புவாதமாகும்.

எல்லா ஸதாபனங்களின் மூலம் தோற்றிய பிரதிநிதிகள் பாராளு மன்றத்தில் ஒன்று சேர்ந்து அரசியலை நடத்துவது தவறென்று எந்தப் பிரமாணத்திலுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியென்று சொல்லி ஒரு சாராரை ஒதுக்குவது வகுப்புவாதமா? எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்போடு அரசியலை நடத்துவது வகுப்புவாதமா? அன்றேல சுரண்டுந் தொழிலுக்கு அநுகூலமாக இருப்பதற்காகவோ இந்த வகுப்பு வாதம் உண்டானது. ஆம் சுரண்டும் தொழிலுக்காகவே இந்த வகுப்புவாதமுண்டானதென்பதற்கையமில்லை

தட்டிக்கொடுக்கும் ஒரு சூழ்ச்சியின் உண்மை

சிங்கள பலய பத்திரிகையின் கட்டுரையொன்றின் தமிழாக்கம் சுதந்திரன் பத்திரிகையிற் கண்டேன் உண்மையில் சிங்களப் பொது மக்களை ஏமாற்றிச் சிரண்டும் கட்டுரைதான் ஆனல் சிங்களப் பொதுமக்கள் இந்தச் சுரண்டுவோரின் வண்டவாளங்களை வெளுத்துக் கட்டினவர்களாகையால அவர்களை இலகுவில் ஏமாற்ற முடியாது. வடபகுதியில் நடந்த பாராளுமன்ரத் தேர்தல்களுக்காக அநேகம் பொதுக் கூட்டங்கள் தமிழ் காங்கிரஸ சார்பில் நடைபெற்றது உண்மை பொதுவாக யானும் அக்கூட்டங்களில் சமூகமளித்திருக்கிறேன். எந்தத் தமிழனுவது சிங்கள சமூகத்தையோ ஒரு சிங்கள சகோதரனையோ, நிந்தனை வசைமாரிகள் பொழிந்தது கிடையாது எத்தனையோ தேர்தல் கூட்டங்களில ஒரு புத்த பிக்கு முதலாய் சமூகமளித்திருந்ததை நான் நேரில பார்த்திருக்கின்றேன். அப்படி ஓர் புத்த பிக்குவையும் வைதக்கொண்டா வசைமாரி பொழியவேண்டும். இதை அந்தக் கடிதர் அறியவில்லை போலும். வழுக்கல தலையனுக்கு சந்நதம் வந்தால எந்தமயிரை போட்டுக் குலுக்குவது ஒரு கூட்டத்தில் நடந்த ஓர் பிரமுகரின் பேச்சை இங்கு குறிப்பிடவேண்டி இருக்கிறது:-"நாங்கள் சிங்களவர்களுக்கு மாருனவர்களென்று யூ என் பி யில் உள்ள தமிழ் முதலாளி வர்க்கம் ஓர் கட்டுதையை கட்டிவிட்டிருக்கிறார்கள் இது சுத்த அபாண்டம். நான் 36 வருடமளவாக ஓர் புத்த குருவை ஆதரித்து சங்கித்து வருகின்றேன் என்றும் சிங்கள சமூகத்திலும் புத்த சமயத்திலும் எனக்குள்ள பக்தியும் பற்றுதலும் அபிமானமும் தான் என்னை இப்படி நடந்துகொள்ளச் செய்தவை. சிங்கள சமூகத்திற்கு நான் மாருனவனுக இருப்பின் இந்தப் புத்த பிக்குவை (சுட்டிக்காட்டி) சங்கித்து வரமாட்டேன் என்று சொன்னார். இதை நானே என் காதாற் கேட்டு ஆனந்தமடைந்தேன்.

மேலும் அந்தப்பிரமுகர்: தமிழ் முதலாளிகளும், சிங்கள முதலாளிகளும், முஸலிம் முதலாளிகளும் சேர்ந்து ஆக்கிய யூ. என். பி. கட்சியாகிய முதலாளிக் கட்சியை எதிர்த்து ஒழிப்பதுதான் எங்கள் லட்சியம் என்பதாக அறைகூவினர் இதுதான் உண்மை பொதுவாக வடபகுதித் தேர்தல் கூட்டங்களில் பொது மக்களுக்கு இந்த லட்சியத்தையே எடுத்து விளக்கிக் காட்டப்பட்டது.

இந்த உண்மையை 'சிங்கள பலய' பத்திராதிபர் அறியவிரும்பினல் அதாவது யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள சிங்களவரும் தமிழரும் எவ்வளவு ஒற்றுமையுடன வாழ்கின்றார்கள் என்பதைத் தாமே நேரில் யாழ்ப்பாணம வந்து பார்த்தறிவது நல்லது.

இதை விடுத்து யாழ்ப்பாணக கடிதம் ஒன்று கிடைத்தது என்று அதைக் கொட்டி முழக்கி ஒன்றுமறியாத பொது மகளை அணுப்பி நினைத்து சுரண்டி விடுவது புத்தியல்ல.

மற்றொரு சுரண்டல்

சிங்களக் கொடியாம் சிங்கக் கொடி அதுவும் வாளேந்திய சிங்கக் கொடி. இதுவே இலங்கையின் தேசியக கொடியாக வேண்டுமாம் அதுவே பாராளுமன்ற கட்டிடதில் பறக்க வேண்டுமாம் அதை விடுத்து வேறொரு கொடி பறக்க விடப்படுமாயின் தமது பட்டாளங்களைக் கொண்டு அக்கொடியைப் பிடுங்கி எறிந்து விடுவாராம். இதுதான ஒரு உதவி மந்திரியாரின் பெருந்தன்மையான சுரண்டல்.

சிங்களக் கொடி சிங்கக் கொடி, தேசியக்கொடி என்று வீண முழக்கம் செய்கிற இந்த முதலாளிவர்க்கம். சரித்திர ஆதார பூர்வமாக அதன் கருத்தை வெளிப்படையாகக் கூறுகின்றார்களில்லை இராமசாமி போன்ற கண்ணுச்சாமி ஸ்ரீ விக்கிரமராச சிங்கன் என்னுமா பெயருடன் அரசனுகி போர்ச் சின்னமாகப் பாவித்திருந்தால் அதை நாமும் சமாதானத் தேசியக் கொடியாக பாவிக்க வேண்டுமா?

ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் சர்வாதிகாரியாகவிருந்து சர்வாதிகார சின்னமாகப் பாவித்திருத்தல் கூடும். இப்பொழுதும் சர்வாதிகாரமாகிய சுரண்டல் நாடகமா? அல்லது சனநாயகமாகிய சமாதான நாடகமா? இல்லை, சர்வாதிகாரச் சுரண்டல் நாடகந்தான் இது.

பழைய சுரண்டலின் தோல்வி

முன்பு ஆசியா மகாநாட்டு நாடகம் ஒன்று நடத்தினர் இந்த முதலாளி வர்க்கம். இந்த நாடகத்தில் சிறுபான்மை முதலாளிகளை ஒதுக்கி விட்டனர். இவர்களின் இந்த நாடகத்தை சிங்களப் பொது மக்கள் பார்த்து தங்களைப் புகழ்ந்து பின் செல்லுவர் என்று நம்பினர் இவர்களின் சுரண்டல் குணத்தை அறிந்திருந்த பொது மக்கள், எங்களைச் சுரண்டிக் குட்டிச் சுவராக்கிவிட்டு, நீங்கள் ஏப்பமிடு பஞ்சணை மெத்தையில ஊஞ்சலாடி குபேர சம்பன்னராக வாழ்கவா எண்ணம் என்று வெட்டி வெளுத்து விட்டனர். இதைக் கண்டு வெருண்ட முதலாளி வர்க்கம் விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையெனகின்றனர்.

தோல்வியின் ஆவேசம்

'திவயின' என்னும் சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர், தங்கள் தோலவியின் வெருட்சியினல் தமிழரிலும் தமிழ்க் காங்கிரஸிலும் இலலாத வசை வக்கணங்கள் பொழிந்த எகிர்க்கிறார். என் செய்யலாம். "ஆத்திரக்காரனுக்குப் புத்தி மடடு"தானே. "நாயின் கோணல் வாலை நிமிர்த்த யாராலாகும்" இந்த ஆசிரியர் தாமே ஓர் வகுப்புவாதியாயிருந்தும், காமாளைக் கண்ணனுக்கு காண்பதெல்லாம் மஞ்சள் மயமாகத் தோற்றுவதுபோல், இவருக்கும தோற்றுவதெல்லாம வகுப்பு வாதியாகத் தோற்றுவதில் ஆச்சரியமொன்றுமில்லை அவருடைய ஆத்திரத்தில் தமிழரை நாய்கள் என்றும் வெடகம் கூச்சமில்லாமற் சொல்லிவிட்டார். அவரின் பாதி இரத்தம் தமிழ்நாய்களின் இரத்தம் என்பதை அவர் அறிந்திருந்தால் இப்படிச் சொல்லி இருக்கமாட்டார். அறிந்திருந்தாலும ஏதோ ஆவேசத்தில்சொல்லிவிட்டார். இதில் குறை என்ன இருக்கிறது

ஆவேசத் துணிவு

"திரு. பொன்னம்பலத்திற்குப் பதில் நடவடிக்கையாக சிங்களவர் வகுப்புவாத வெறி கொண்டு உணர்ச்சி பெற்று எழுந்து விடுவார்களானல்....." என்று உளறி ஓலமிடுகின்றார். சிங்களப் பொதுமக்கள் இவர்களின் சுரண்டல் ஆவேச உணர்ச்சிகுச் செவி கொடுக்கவில்லையெனக் கண்டு எழுந்து விடுவார்களானல் என்று தமது ஆவேசத்தைச் சற்று தணித்துக் கொண்டதற்காக இவரில் இரங்குகின்றேன்.

வாளேந்திய சிங்கக் கொடியின் பொதுவான கருத்தை சரித்திர ஆதாரத்துடன் வெளியிடுமாறு மீணடும் இந்த ஆசிரியர் அவர்களைக் கேட்கிறேன்.

சங்கக்கடைப் பொருள்கள் கூடாதாம்!

அங்கத்தவர் வாங்க மறுக்கின்றனர்

கொழும்பு, நவ. 1

சிலரக உப உணவுப் பொருள்கள் உபயோகத்துக்கு ஏற்றனவல்லவெனக் கூறி சங்கக் கடைகளில் உள்ள அங்கத்தினர் அவற்றை வாங்க மறுத்து விடுகின்றனர். இதனல் அப்பொருள்கள் காலகெதியில் அழிக்கப்பட வேண்டியே யிருக்கின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை ஸதாபனங்கள் இந்த உப உணவுப் பொருள் சப்ளை சம்பந்தமாக உணவு கூட்டுறவு இயக்க மந்திரியின் உதவியை நாடுவதாக அறியப்படுகிறது.

கொழும்பு - திருச்சினுப்பள்ளி விமான சர்வீஸ்

இந்திய சர்க்காரிடம் அனுமதி கோரி விண்ணப்பம்

கொழும்பு, நவ 1

கொழும்பு-திருச்சினுப்பள்ளி விமான சர்வீசை ஏற்படுத்திக் கொள்ளவதற்கு இலங்கை சர்க்கார் அனுமதி கோரி இந்திய சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளது என்று அறியப்படுகிறது. வாரத்தில் இரு இடங்களிலுமிருந்து 3 நாட்களுக்கு பிரயான ஒழுங்குகள் செய்யப் படுமென்றுதெரிகிறது.

இனிமேலும் பொது மக்களை அணுப்பி அடிமை வாழ்வுக்குள்ளாகக எண்ணுவது புதியல்ல.

அடிமை வாழ்வின் பகற்கனவு

தமிழர், சிங்கள ராச்சியத்தைப பறிக்க வரவில்லை சிங்கள சமூகம் இலங்கையில் தோற்றியதுபோல தமிழரும் சிங்களவருக்கு முன்பிருந்தே இலங்கையில் தோற்றியுள்ளவர்களாகையினல் அவர்களுக்கும் சிங்கள மக்களைப்போன்று பூரண உரிமை இலங்கையிலன்றி வேறு எந்த இடத்திலும் கிடைக்கவே கிடையாது. ஆகவே இலங்கைத் தமிழர் இலங்கையிலேயே பூரண உரிமையுடன் வாழ வேண்டும்; அன்றேல் இங்கேயே இறந்தொழியவேண்டுமன்றி இந்த முதலாளி வர்க்கத்தாரின் கீழ் அடிமை வாழ்வுக்குட்பட மாட்டாரென்பது உண்மை. அங்ஙனம் முதலாளி வர்க்கம் எண்ணுவதேல் அது பகற்கனவாகும்.

அமர வாழ்வு

இந்த முதலாளி வர்க்கம் பொது மக்களிடைபே குரோத துவேஷ உணர்ச்சிகளை ஊட்டி அவர்கள் அல்லோலபபட தாங்கள் அவர்களைச் சுரண்டி குபேர சம்பன்னராக வாழலாம் என்று எண்ணுகின்றனர். இந்த வாழ்வு அல்லல் வாழ்வாகவே முடியும் ஒரு பிலிமைத்தலைவை ஏஹலபபொல என்போரின் முதலாளித்துவ மோகத்தினுலன்றோ இன்றும் நாம் அந்நியோரின் அடிமைத் தளையில் கட்டுண்டு கிடக்கின்றோம் இந்த அடிமைச் சங்கிலி அறுந் தொழியும் வேளையில் இந்த முதலாளி வர்க்கம் தோன்றி அறும் அடிமைச்சங்கிலியை வேறு சங்கிலிகொண்டு பூட்டப்பார்க்கின்றனர் பொது மக்களே உஷார்.

முதலாளிகள் பொது மக்கள் என்பது கடவுளின் இயற்கை அமைப்பு. எப்படி? முதலாளிகளுக்கு உழைத்துக் கொடுப்பதற்காகவே பொது மக்கள் படைக்கப்பட்டார்களாம் முதலாளி வர்க்கம் சொன்னபடி பொது மக்கள் உழைத்துக் கொடுத்து அவர்கள் கொடுத்ததைப் பெற்றுக்கொள்ள வேண்டும் இதுதான் அவர்கள் நீதி தீர்ப்புச் சொல்லுமுரிமை அவர்களுக்கே உண்டாம். எப்படி இருக்கிறது யோசியுங்கள் இதுதானு அமரவாழ்வு, இல்லை இது சுரண்டல் வாழ்வு.

சிங்களவர், தமிழர், முஸலிம்கள் முதலிய சமூகங்கள் இந்தச் சுரண்டுவோரிடமிருந்து விடுபட்டு ஒன்றுபட்டு வாழ்வதே நல்வாழ்வாகும் அன்றைக்கே பிரிட்டிஷாரும் நம் நாட்டைவிட்டு வெளியேறும் நாளாகும்; அந்த வாழ்வே அமரவாழ்வாகும்.

ஏ. எஸ். ரி. நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைக் கருகில் போலிஸ் சுட்டது

ஊர்வலம் போவது பற்றி தகராறு

60 வீடுகள் சாம்பல், 100 பேர் கைது

மதுரை, அக் 31

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகாவைச்சேர்ந்த ஒரு கிராமத்தில் நேற்று நடைபெற்ற கலகத்தில் சுமார் 60 வீடுகள் தீயிடப்பட்டு நாசமாக்கப்பட்டன.

அதற்கு முந்திய நாள் இரவு ஒரு குறிப்பிட்ட தெருவின்வழியாக ஒரு ஊர்வலம் நடக்கச் செல்வது சம்பந்தமாக கிராமவாசிகளில் இரு பகுதியினரிடையே சண்டை ஆரம்பமாயிற்று. நேற்று காலையில் தனங்கள் கிராமத்தில் பல இடங்களில் கூட்டம் கூட்டமாகக் கூடி கலகம்செய்வதிலும் தீயிடுவதிலும் இறங்கி விட்டனர். கலகக்காரர் ஒருவர் ஒரு துப்பாக்கி சொண்டு சுட்டதாகவும் அதில் மூவர் காயமடைந்ததாகவும் சொல்லப்படுகிறது. நிலைமையைச் சமாளிப்பதற்காக ஸ்தல போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார்.

சுமார் 100 கிராமவாசிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மதுரையிலிருந்து ரிசர்வ் போலீஸ் படையொன்று ஸ்தலத்திற்குவிரைந்துள்ளது. நிலைமை தற்போது அமைதியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

நேற்றுமாலை மதுரை ஜில்லா கலெக்டர் அக்கிராமத்தைப் பார்த்து வந்தார்.

ஹிந்தியில் செய்தி தரும் 'டெலிபிரின்டர்கள்'

இந்தியாவில் சீக்கிரம் ஏற்படப் போகின்றன

அலஹாபாத், அக். 30

ஹிந்தி பத்திரிகைகளுக்குச் செய்திகள் தருவதற்குச் சீக்கிரத்தில் ஐக்கிய மாகாணத்தில் ஹிந்தி டெலிபிரின்டர்கள் ஏற்படப் போவதாக நம்பகமான தகவல் கிடைத்திருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் ஹிந்தி டெலிபிரின்டர் இயந்திரங்களைப் பெறுவதற்கு ஐ. மா. சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஏகாதிபத்தியத்தைக் காக்க டிகால் கனவு

ஆதிக்க நாடுகள் ஒன்றுபட வேண்டுமாம்

ஹேக் நகர், அக். 31

பிரிட்டன், ஹாலந்து, பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய நான்கு நாடுகளும் தங்கள் அடிமை நாடுகள்பற்றிய பிரச்னையில் ஒசதமைக்க வேண்டும் என்று ஜெனரல் டி கால் கூறியுள்ளார். இது டச்சு கன்சர்வேடிவ் பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட டிகால் பேட்டி சம்பந்தமான செய்தியில் காணப்படுகிறது.

"இந்த நாலு நாடுகளுக்கும் ஒரே பொதுவான விதியே காத்திருப்பதால் தங்கள் பொதுவான விதியைப்பற்றி ஐ. நா. சபையில் அல்லது ஒரு சர்வதேச மகாநாட்டில் இந்நாடுகள் கலந்தாலோசிக்க வேணடும். இந்த நாலு உலக ஏகாதிபத்தியங்களில் ஓர் இடத்தில் ஓர் வெடி வெடித்தால் அது மற்ற மூன்று நாடுகளுக்கும் செய்யப்படும் ஒரு எச்சரிக்கையே அடிமை நாடுகளின் தற்போதைய கிளர்ச்சி நிலையில் மேற்கு ஐரோப்பா ஒற்றுமையின் அவசியத்தை உணர வேண்டும்" என்று டி கால் கூறியுளளார். [ராய்ட்டர்]

பெருவியாவில் பூகம்பம்

நியூயார்க், நவ. 2

விமானின் தலைநகரான பெருவியாவில் மிகப் பெரிய பூகம்பம் நேற்று ஏற்பட்டதாக ரையோடி ஜனேரோவிலிருந்து கிடைத்துள்ள செய்தி கூறுகின்றது. இங்கு ஏற்பட்ட சேதம்பற்றி இன்னும் திட்டமாகத் தகவல்கள் கிடைக்கவில்லை. (ராய்ட்டர்)

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

பழுத்த சேனநாயக்காவின் உளுத்த குடும்ப ஆட்சி!

எதிர்க் கட்சியினர் வாழாவிருப்பது, ரோம் எரியும் பொழுது நீரோ வீணை மீட்டியதாகும்

பிரிட்டிஷார் 'பிளாக் வைட்' துரைமாருடன் செய்யும் ஏகாதிபத்திய ஒப்பந்தம்

மூப்பன் சொல்லுகிறபடி நடவென்று கவர்னருக்கு உத்தரவா?

சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த 'ஜனசக்தி' என்னும் சிங்களப் பத்திரிகையில் உள்ள கட்டுரையின் தமிழாக்கம்.

பார்லிமெண்டுக்குள்ளேயும் வெளியேயும் பழுத்துப்போன சேனநாயக்காவின் உளுத்துப்போன குடும்ப ஆட்சியை குப்புறக்கவிழ்த்துவிட உடனடியாக நடவடிக்கை யெடுத்துக் கொள்ள வேண்டும்.

இடதுசாரிகள் உடனே ஐக்கியப்படவேண்டும். இடதுசாரிகள் மட்டுமல்ல, சேனநாயக்கா குடும்ப ஆதிக்கத்திற்கு எதிராகவுள்ள ஒவ்வொரு சீர்திருத்த வாதிகளும், தேச மக்களின் நலத்தில் ஆர்வமுடையவர்களும், கட்டுப்பாடான எதிர்நடவடிக்கையின் அத்தியாவசியத்தை யுணர்ந்து ஐக்கியப்பட வேண்டிய சமயம் இதுவேயாகும்.

சீர்திருத்த வாதிகளிடையேயுள்ள சில சுய நலமிகள் சேனநாயக்கா குடும்ப ஆதிக்கத்தை மறுபடியும் அரசியல் துறையில் ஸ்தாபிதம் செய்தார்கள். எனினும் இந்த சேனநாயக்கா குடும்ப ஆதிக்க சர்வாதிகாரம் பலம் பெறுவதை, மக்களின் வாழ்க்கைத் தேவைக்காக உழைப்பதையே லட்சியமாகக் கொண்ட இடதுசாரிகள் பார்த்துக்கொண்டு வாழாவிருக்க முடியாது. அப்படி நாம் வாழாவிருப்பின் 'ரோமாபுரி தீப்பற்றி யெரியும்போது வீணை வாசித்துக்கொண்டிருந்த நீரோ" வின் செய்கைக்கு சமானமாகும்.

பொதுமக்களின் விருப்பத்திற்கு-சம்மதத்திற்கு தேவைக்கு காலால் உதைத்து சேனநாயக்கா கம்பெனி தாம் விரும்பியபடி சுயலாபம் கருதி 1931ல் இருந்து இதுதேசத்தை ஆட்சிபுரிந்தார்கள். எங்கள் பணத்தை தேசியச் செல்வத்தை-அவர்களின் சீதனச் சொத்துபோன்று நாஸதிபண்ணினார்கள். அஜீர்ணத்தால் அவதியுறும் பணக்காரர்கள், பிளாக்மார்க்கட்ராட்சதர்கள். ரத்தப்புடையன்களானபஸ் முதலாளிகள், ஏழை தொழிலாளியின் சிரம சக்தியால் பணம்கொழுத்த தோட்டக்காரர்கள் ஆகியோர்களை மென்மேலும் கொழுக்கவைப்பதற்காக, தேச மக்களை கோரமான நஷ்ட கஷ்டங்களுக்கு ஆளாக்கினார்கள்.

1815ல் எதெஹலப்பொல, மொல்லிகொட கம்பெனியினர் பல நூற்றாண்டுகளாக சுயாதீனமாய் இருந்த இத்தேசத்தை வெள்ளைக்காரர்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்ததுபோன்று, இன்று சேனநாயக்கா-குணதிலகா கம்பெனியினர், ஹம்பர் கார்களுக்கு, ராஜமஞ்சள் விருந்துகளுக்கு டெப்பிள் ட்ரீஸ் மும்தாஜ் போன்ற மாளிகைகளுக்கு, சீர்கெட்டு உளுத்துப்போய்க்கொண்டிருக்கும் குபேர கும்பல்களின் கீர்த்தியையும் தேஜஸையும் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக, சுதந்திரத்தின் பேரால் ஈழமாதாவின்பேரால் செய்யக் கூடிய எவ்வளவு இழிவான துரோகத்தையும் கூட செய்கிறார்கள்.

இப்பொழுதே, இரண்டாவது முறையாக சாம்ராஜ்யக் கோவிலுக்கு இலங்கையைப் பலிகொடுத்ததாகி விட்டது. ஸர் ஒலிவரின் டாம்பீக வாழ்க்கைக்கு சென்றவிடத்தில் எங்கள ரமணீயமான இலங்கை அவருக்கு 'விட்டில் இங்லண்ட்' ஆகிவிட்டது. என்ன நன்றி கெட்டதனம்? அரசாங்கப் பணத்திலேயே இங்கிலாந்தைச் சுற்றி ஒரு திரையோட்டம் செலுத்தவதிலும், எஞ்சிய நேரத்தல் வெள்ளையர்களோடு சேர்ந்து அவர்களின் உரிமைகளைப்பாதுகாத்துக் கொடுப்பதற்கு வாக்குறுதியளித்தும் அமெரிக்கன்-பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுக்கு எங்கள் ரமணீயமான தாய்நாட்டை ஏலம் ஒலவர் இன்னுமொருமுறை ஈடு வைத்துவிட்டார்

எதிர்காலத்தில், இந்த "பிளாக் வைட்" துரைமார்களோடு சம்பந்தம் வைத்துக் கொண்டுதான் ஏகாதிபத்திய வாதிகள் எங்கள் தேசத்தை குறையாடுவார்களென்பது நிச்சயம். ஆனபடியால் இன்றைக்கு சேனநாயக்கா கம்பெனியும் ஏகாதிபததிய வாதிகளும் இரு பிரிவினரல்ல; ஒரே கூட்டத்தினர்தான். ஒன்றாக பிணைந்து, ஒட்டி, ஒன்றாக நினைத்து ஒரேமாதிரி செயல்கிற ஏகாதிபத்திய-சுதேச சுயநலமிகளின் சம்பந்தத்தை தவிடுபொடியாக்காவிடாவிடால், இந்தேசத்து பொதுமக்களுக்கு ஒரு போதும் தலை தூக்கி நிற்க முடியாது போய்விடும் என்பது நிச்சயம்.

எனவே மேற்படி காரணங்களை மூலலட்சியமாகக் கொண்டு இடதுசாரிகள் ஒன்றுபட வேண்டும். கையாளக்கூடிய திட்டங்களை வகுத்து கட்டுப்பாடடை இடதுசாரிகள் உண்டாக்கி விட்டால், மற்ற வகுப்பினரும் இந்த முன்னணியில் சேர்ந்துகொள்ளுவார்கள். இப்படியான-கட்டுப்பாடான-முன்னணி முன்னேறுவதில் சந்தேகமென்ன?

பார்லிமெண்டுக்குள்ளே சேனநாயக்கா அரசாங்கத்தை குப்புறக் கவிழ்த்துவிட்டு தேசத்திற்கு பொருந்திய-மக்களுக்குகந்த-அரசாங்கத்தை நிறுவ இன்றுள்ள சூழ் நிலையில் சில வழிகளிலும் இடமுண்டு பார்லிமெண்டிலுள்ள இடதுசாரிகள் உண்மையிலேயே ஒன்று சேர்ந்துகொள்ளுவார்களானால், கட்டுப்பாடடுடன் போராடுவார்களானால், இந்தப் பார்லிமெண்டிலே மக்களுக்கு அத்தியாவசியமான தேவைகளை ஓரளவு பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய மட்டும் இடமுண்டு.

கட்டுப்பாட்டுடன் இடதுசாரிகள் தமது பொது சக்தியை பொது நலனுக்காக உபயோகிப்பார்களானால் அதிக நாட்கள் பிடிக்காமலே சேனநாயக்கா அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு, வேறு அரசாங்கத்தை நிறுவ முடியும். அப்படியானால் இதுதான் சமயம்.

காட்டிலிருந்து அலரிமரத்தில் ஏற 2 லட்சம்

இலங்கையின் பிரதம மந்திரி திரு சேனநாயக்கா கூடிய சீக்கிரம் லண்டனிலிருந்து "டெம்பிள் ட்ரீஸ்" மாளிகைக்கு பிரவேசம் செய்வார். இதற்குமுன் ஒரு வெள்ளை அதிகாரி இருந்த "டெம்பிள் ட்ரீஸ்"ஸை பிரதம மந்திரியின் மாளிகையாக்க செலவு 2 லட்சமாகும்.

இது போதாதென்று, பிரதம மந்தரிக்கு ஒரு புதிய ஹம்பர் கார் வாங்குவதற்கு 20,000 ரூ செலவு செய்யப்பட்டிருக்கிறது இவ்வளவும் போதாதென சம்பளமாக 1500ம் விருந்தினர்களை உபசரிப்பதற்கு 1500ம் மாதாவாரி ஒதுக்கப்பட்டிருக்கிறது இன்னும் என்னவெல்லாம் வேண்டும்? அவ்வளவு சௌகரியங்களும் உண்டு. இவை எல்லாவற்றிற்கும் அரசாங்கப்பொக்கிஷம் இருக்கும்போது கவலை ஏன்? எப்படி இருக்கிறது வேலை!

திரு சேனநாயக்காவுக்கும் அவரைப் போன்றவர்களுக்கும் இன்னும் இதற்குமேல் சுதந்திரம் அவசியம் என்று நினைப்பது சும்மா முஸ்பாத்திதானே?

"டொமினியன் அந்தஸது" உடனடியாகத் தேவைப்படுவதன் காரணம், ஒரு சமயம் டொமினியனின் கீழ் கவர்னர் ஜெனரல் பதவியையும் வகிக்கிறது இதற்கு மேலும், சேனநாயக்கா ஆதிக்கமும் குடும்பமும் பண்

எகிப்திய காலரா நிலைமை

மேலும் 364 பேர் மரணம்

கெய்ரோ அக் 31

எகிப்தில் கடந்த 24 மணி நேரத்தில் காலரா நோய் காரணமாக மாண்டுபோனவர்கள் எண்ணிக்கை 364 புதிதாக நோய் கண்டிருப்பவர்கள் 714 பேராகும்.

காலரா ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 14614 பேருக்கு நோய் கண்டதாகவும் அதில் 6914 பேர் மாண்டதாகவும் தெரிகிறது

இந்நோய் பரவுவதைத் தடுப்பதற்காக கிரீஸ் எல்லா வித எகிப்திய கப்பல், ஆகாயப் போக்கு வரத்தையும் தற்காலிகமாக நிறுத்திவிடும்

பிரான்சும் எகிப்திய விமானங்கள் மீது தடை விதித்துவிட்டது. மிக அத்தியாவசியமான சில காரணங்களுக்காக மட்டும் சில விமானங்கள் இறங்குவதற்கு அனுமதிக்கப்படும். (ராய்ட்டர்)

இத்தாலிய ஏகாதிபத்தியத்தின் எதிர்காலம்

லண்டன், அக். 31

நவம்பர் 5ல் நாலு வல்லரசுகளின் உதவி அயல் நாட்டு மந்திரிகள் மகாநாடு லண்டனில் நடைபெறும். அப்போது இத்தாலிய குடியேற்ற நாடுளின் எதிர்காலம் சம்பந்தமாக இதர நாடுகளின் அபிப்பிராயங்களை அறிவதுபற்றி ஆலோசிக்கப்படும். (ராய்ட்டர்)

அசைஸ் கமிஷனர் விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார்

கொழும்பு, நவ. 1

பிரதம நீதிபதி ஸர். ஜோன் ஹோவார்ட் முன் திரு வி. எல். எசன் கிளெயர் சுவான், அசைஸ கமிஷனராக விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்

அதிக உருளைக் கிழங்குகள் வந்துள்ளன

கொழும்பு, நவ. 3

ஆஸதிரேலியாவில் இருந்து "எஸ். எஸ். தலியா" "எஸ். எஸ் சுரா" என்னும் கப்பல்களில் கொண்டுவரப்பட்ட சுமார் 400 டன் உருளைக் கிழங்குகள் கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்படுவதாக திரு ஆள்வாப்பிள்ளை கூறுகிறார். மேலும் நவம்பர் மாதத்தில் சுமார் 500 டன் உருளைக் கிழங்கு ஆஸதிரேலியாவிலிருந்து வருமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

மடங்கு தேஜஸ்பெறவேண்டுமென்பதாய் இருக்கக் கூடும்.

சேனநாயக்கா மூப்பனார் சொல்லுகிறபடி செய்

சமீபத்தில் நியமிக்கப்பட்ட பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனுக்கு நியமிக்கப்பட்ட மூவரில், ஒருவர் தேர்தலில் பலாத்காரம் உபயோகித்து தண்டனை பெற்றாராகையால் அவர் நியமனம் முறையல்லவென்று கவர்னரால் திரு சேனநாயக்காவுக்கு கூறப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அவருக்கு "நைட்" பட்டம் வழங்க தகுதியென்றால் வேறு உயர் பதவிக்கும் தகுதியென்று கவர்னருடன் வாதாடினார் திரு. சேனநாயக்கா.

இதனால்தான் கவர்னரால் தெரிவு செய்யப்பட வேண்டிய 15 செனட்டர்களையும் ஒரே தடவையில் தெரிவுசெய்ய முடியாமற் போனது என்று சொல்லப்படுகிறது.

இந்த முட்டுதலின் பின் செய்யவேண்டியவற்றைப்பற்றி அறிந்துகொள்ள விரும்பிய கவர்னர் இவற்றை அந்நிய நாட்டு மந்திரிக்குத் தெரிவித்ததற்கு "இலங்கையின் பிரதம மந்திரி சொல்லுகிறபடி செய்யவும்" என்று கவர்னருக்கு பதில் கிடைத்ததாக நம்பத்தகுந்த ஒரு செய்தி கூறுகிறது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதிகள் "பூனையைக் கொண்டு பிலாக் கொட்டையைக் கிளறும்" வேலையைச் சாமர்த்தியமாகச் செய்வது எவ்வளவு லட்சணமாய் இருக்கிறது?

பாதுகாப்பு சபையில் இந்தோனேஷியப் பிரச்னை

அமெரிக்காவின் போக்குக்கு சோவியத் கண்டனம்

பிளிசிங்மெடோன் (நியூயார்க்) நவ. 1

யுத்தத்தை நிறுத்தும்படி பாதுகாப்புக் கவுன்ஸிலினால் ஆகஸ்ட 4-ம் தேதி ஹாலந்துக்கு உத்தரவிட்டதல்லவா? அவ்வுத்தரவின் போது டச்சுக்காரர் கையில் இருந்த இந்தோனேஷியப் பகுதியை அவர்களிடமே விட்டுவிட வேண்டும் என்று அமெரிக்கா ஓர் தீர்மானத்தைக் கொண்டுவந்தது

சோவியத் ரஷியா இத்தீர்மானம் மிகுந்த வெட்கக்கேடானது என்றும், இதன் மூலம் டச்சுக்காரருடைய அநீதிக்கு பாதுகாப்பு சபையை டங்காளி ஆக்க முயற்சிக்கப்படுவதாகவும் கூறி பலமாகக் கண்டித்தார்

இந்தோனேஷியா ஜூலை 21-ம் தேதிக்கு முன் டச்சுத் துருப்புகளை வாடஸ் வாங்க வேண்டும் என்று கோரியிருப்பதை சோவியத் பிரதிநிதி ஒருமிக்கோ ஆதரித்து ஓர் தீர்மானம் கொண்டுவந்தார். அது தோல்வியுற்றது.

முடிவில் ஒரு உப கமிட்டி அமெரிக்க ஆலோசனையில் திருத்தம் ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டது. (ராய்ட்டர்)

யாழ்ப்பாணக் கல்லூரி சரித்திர பேராசிரியர்

சிக்காகோவில் இருந்து வந்துள்ளார்

யாழ்ப்பாணம், நவ 1

யாழ்ப்பாணக் கல்லூரியின் சரித்திரப் பேராசிரியராக டாக்டர் டபிள்யூ. ராபர்ட் ஹோல்ம்ஸ் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் சிக்காகோவிலுள்ள நோர்த்பாக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவராகும். இவர் தமது பதவியை ஏற்றுக்கொள்வதற்கு வட்டுக்கோட்டை வந்துசேர்ந்துள்ளார்

பாணந்துறை அங்கத்தவருக்கு வரவேற்பு

வாதுவை, அக். 31

பொதுபிட்டியா வாலிபர் லீக்கின் ஆதரவில் பாராளுமன்றத்தில் பாணந்துறை அங்கத்தவரான திரு ஹென்ட்றி பீரிஸ் என்பவருக்கு பொது வரவேற்பளிக்கப்பட்டது. இங்கு நடந்த பொதுக்கூட்டத்தில் திரு பீரிஸ் பேசுகையில் இவ்வளவு காலமும் கவனிக்கப்படாது ஒதுக்கி வைக்கப்பட்டவர்களின் சகாப்தம் இப்பொழுது உதயமாகி விட்டது என்றுகுறிப்பிட்டார்.

மரண வாக்குமூலம் பதிய சமாதான நீதவான் இல்லை

அனுராதபுர நீதியரசரின் 65 மைல் பிரயாணம்

அனுராதபுரம், அக். 31

தமன்கடுவா டிஸ்டிரிக்டில ஒரு முன்லிம் கத்திக் காயத்துடன் இறக்குந் தறுவாயில் இருப்பதாக அனுராதபுரம் நீதியரசருக்கு தந்தி கிடைத்தது. அவர் கோர்ட்டு வேலைகளை ஒத்தி வைத்துவிட்டு பொலன்னறுவைக்கு (65 மைல் தூரம்) புறப்பட ஆயத்தமானபோது அந்நபர் இறந்துவிட்டதாக தந்தி கிடைத்ததாக கூறப்படுகிறது. இப்பகுதியில் மரணவாக்குமூலம் பதிவுசெய்ய ஒரு சமாதான நீதவான் இல்லாமை காரணமாகவே நீதியரசருக்கு செய்தி அனுப்பப்பட்டது. பொலன்னறுவை வந்து சேர்ந்த நீதியரசர் இச்சம்பவம் நடந்த இடத்துக்கு மேலும் 27 மைல் காடுகளுக்கூடாகவும் வெள்ளத்தைக்கடந்தும் செல்ல வேண்டியிருந்தது.

கத்திக்குத்து நடந்த இடமான பாலியகொடெல்லா என்னுமிடத்தில் நீதியரசர் விசாரணை நடத்தினார். இங்குள்ள ஒரு பள்ளிவாசல் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த தகராறை சமரசம் செய்துவைக்க முயன்ற சின்ன லெப்பை என்பவரை சீனிப்புள்ள என்னும் முஸ்லிம் கத்தியால் தலையில் குத்திவிட்டதாக கூறப்பட்டது. போலீஸார் சீனிப்புள்ளயைக் கைது செய்ததுடன் இதில் சம்பந்தப்பட்டவரென்று கூறப்படும் வேறொரு முஸ்லிமையும் தேடிவருகின்றனர்.

ஐரிஷ் பாராளுமன்றம் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டது

கெதியில் கலைக்கப்படுமென டிவாலரா அறிக்கை

டப்ளின், நவ. 1

ஐரிஷ் பாராளுமன்றத்தின் இவ்வருடத்தில் கலைத்து அடுத்த வருட முற்பகுதியில் புதிய பொதுத் தேர்தல் நடத்துவதாக நேற்று இரவு ஐரிஷ் பிரதம மந்திரியாகிய திரு. ஈமன். டி வாலரா கூறியுள்ளார்.

சென்ற புதன்கிழமை அயர்லாந்தில் நடந்த மூன்று உபதேர்தலின் முடிவில் இரண்டாவது அரசினர்கட்சி அபேட்சகரின் தோல்வி வெளியிடப்பட்டதும் திரு. டிவாலரா பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:- "அரசாங்கத்தின் நிலைமை தளர்வினப்பட்டு விட்டமையால், அதன் செயல்கள் ஆட்சேபனைக்கு இடமளிக்கின்றதாகிறது. ஆகவே அடுத்த வருடத்தில் தேசத்தில் ஏற்படவிருக்கும் பிரச்னைகளை மக்களின் நம்பிக்கையிழந்த அரசாங்கம் செய்ய முடியாது.

தொடர்ந்து திரு டிவாலரா வின் அறிக்கை கூறுவதாவது:- "தேச மக்கள் தங்கள் தீர்ப்பை அளிப்பதற்கு வசதியை ஏற்படுத்திக் கொள்வதற்காக இப்பொழுதுள்ள "டெயில்" பாராளுமன்றத்தைக் கூடிய சீக்கிரத்தில் கலைக்க எண்ணியுள்ளேன். ஒவ்வொருவரும் பொதுத் தேர்தல் கூடிய சீக்கிரத்தில் அடுத்த வருட முற்பகுதியில் வருமென எதிர்பார்க்கலாம்.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு திறம் லங்கா பிரான்ட் வினுகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்.

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kaiyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றினும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொறி விற்பனைக்கு

சவர்லட் 2. 2½. 3. 3½ டன் லொறிகள் விற்பனைக்கு இருக்கின்றன. பொடி முதல் சகலமும் புதியது.

எம். எஸ். மெண்டிஸ், 288. பஞ்சிக் காவத்தை ரோட், மருதானை.

பாக்கிஸதான் பிரதமருக்கு நேருஜீ எச்சரிக்கை

பாதுகாப்பு சபை கூட்டத்தில் காஷ்மீர் பிரச்னை

புதுடில்லி, நவ. 2

ஸ்ரீநகர் பள்ளத்தாக்கு பிரதேசத்தில் இந்திய யூனியன் படைகள் ரோந்து சுற்றுவது அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் பலமான அரண்களை அமைத்தும் வருகின்றன. வியாழக்கிழமை ஸ்ரீநகருக்கு மேற்கே சுமார் 20 மைல் தூரத்தில் எதிரிகள் தாக்கினதாகவும் அவர்களுக்கு அதிக சேதமேற்பட்டுள்ளதென்றும். இந்திய டொமினியன் படைகள் பயாரியாவாட்டுக்குள்ளும். மாஹுகிராமில் என்னுமிடத்திலும் புகுந்துள்ளனவென்றும், இந்த இடங்கள் இந்திய சர்க்கார் நிர்வாகத்துள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கை யொன்று கூறுகின்றது.

பயாரியாவாட்டிலுள்ள மக்களை பாக்கிஸதானுடன் சேருவதற்கு கிளர்ச்சி செய்யும்படி ஜுனாகத் அதிகாரிகள் முயற்சிப்பதாகத் தகவல்கிடைத்துள்ளதன்மேல் பண்டித நேரு பாக்கிஸதான் பிரதமருக்கு விடுத்துள்ள எச்சரிக்கையில் இத்தகைய விவகாரங்கள் தொடர்ந்து நடப்பதை இந்திய சர்க்காரால் சகிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

மகேஜாதியினர் காஷ்மீரை விரைவில் கைப்பற்றி விடுவர் என்று சுதந்திர காஷ்மீர் சர்க்கார் அறிக்கை கூறுவதாகத் தெரிகிறது. காஷ்மீரின் உள்ளே 8 மைல் தூரத்திலுள்ள புலந்தாரி என்னுமிடத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அறிக்கையில் சுதந்திர சர்க்கார் படைகள் காஷ்மீர் வீதிகளில் புகுந்து விட்டதாக கூறப்படுகிறது பாரகூட்டுகள் மூலம் இறங்கிய இந்திய துருப்புகள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது. நகரத்துள் புகுந்தவர்களுடன் அங்கிருந்த மக்களும் சேர்ந்துகொண்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு பாட்டியாலா சமஸ்தான உதவி

இப்பொழுது இந்தியாவில் ஏற்படுள்ள நிலைமை காரணமாக எலிஸபெத் இளவரசியின் விவாகத்திற்குச் செல்ல இருந்த பாட்டியாலா மகாராஜா தமது பிரிட்டன் விஜயத்தை ரத்து செய்துவிட்டதாக அறியப்படுகிறது சீக்கிய அரசியல் கட்சிகள் கொண்ட பிரதிநிதிகள் ஸ்தானத்தின் கமிட்டிக் கூட்டத்திற்கு மகாராஜா தலைமை தாங்கி நடத்தினார் காஷ்மீர் பிரச்னையில் இந்திய சர்க்காருக்கு உதவி புரிவதாக இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

கில்கிட் மாகாணத்தில் . . . .

காஷ்மீருக்கு வடக்கேயுள்ள கில்கிட் மாகாணத்தில், மகாராஜாவின் அறிக்கையை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்ததாகவும் இந்து அதிகாரிகள் சிறையில் வைக்கப்பட்டுள்ளன ரென்றும் கூறப்படுகிறது. இங்குள்ள முஸ்லிம் அதிகாரிகளும் முஸ்லிம் இராணுவ அதிகாரிகளும் தற்காலிகமாக கில்கிட் மாகாண நிர்வாகத்தை அமைத்துக்கொண்டதாக ஊர்ஜிதமற்ற செய்தி கிடைத்துள்ளது.

மேற் பர்மாவில் ஜப்பானிய துருப்புகளை எதிர்த்த படைகளுக்கு தலைமை வகித்த இந்திய அதிகாரி காஷ்மீரிலுள்ள இந்தியத் துருப்புகளுக்கு தலைமை தாங்குவாரென்று கூறப்படுகிறது.

காஷ்மீரில் சுமார் 300 முதல் 500 வரை பிரிட்டிஷார் இருந்ததாகவும் இப்பொழுது அங்கு எத்தனை பேர் இருப்பதாகத் தெரியவில்லையென்றும் கூறப்படுகிறது. நேருவுள்ள பிரிட்டிஷார் வெளியேறத் தயாராக இருந்தனரென்றும் தெரிகிறது.

லாகூரில் மகாநாடு

லாகூர், நவ. 2

இந்தியா-பாக்கிஸதான் கூட்டு பாதுகாப்பு சபையின் கூட்டம் நேற்று மவுண்ட் பேட்டன் பிரபு தலைமையில் நடைபெற்றது. காஷ்மீர் நிலைமை பற்றி பாக்கிஸதான் கவர்னர் ஜெனரல் ஜனாப் ஜின்னாவும், இந்திய கவர்னர் ஜெனரல் மௌண்ட் பேட்டனும் சுமார் 3 மணி நேரம் சர்க்கார் மாளிகையில் நேற்று பிற்பகல் பேசினார்கள். இக்கூட்டத்தில் 30 விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன. பாக்கிஸ்தான் பிரதமர் ஜனாப் லியாகத் அலிகான் தேக அசௌக்கியம் காரணமாக சமுகமளிக்க முடியாததால் மௌண்ட் பேட்டன் பிரபு அவருடைய இல்லத்தில் அவரைச் சந்தித்து காஷ்மீர் விஷயமாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

(அ-பி-ராய்ட்டர்)

சீக்கியத் துருப்புகளுக்கு உதவி

லாகூர், நவ. 1

காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரைக் கைப்பற்ற மகேஜாதியினர் முன்னேறிச் செல்வதைத் தடுப்பதற்கு அனுப்பப்பட்டிருந்த சீக்கியத் துருப்புகளுடன் சேர்ந்து கொள்ள ஆயுதந்தாங்கிய இந்தியப்படை துரிதமாக முன்னேறுகின்றதென்று கூறப்படுகின்றது. பொதுஜன வாக்குகளை எடுத்து காஷ்மீர் எந்த டொமினியனுடன் சேர வேண்டுமென்பதை முடிவு செய்யும் வரை ஒரு இடைக்கால ஆட்சியை ஏற்படுத்துவது பற்றி இந்தியா-பாக்கிஸதான் டொமினியன்களின் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

பிந்திக் கிடைத்துள்ள செய்திகளின்படி நிலைமையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சில இடங்களில் மகேஜாதியினர் ஸ்ரீநகருக்கு 10 மைல் தூரத்துக்கு முன்னேறியிருப்பதாகவும் இந்தியத் துருப்புகள் விமான உதவியுடன் முன்னேறுவதாகவும் கூறப்படுகிறது.

ஸ்ரீநகருக்கு 20 மைல் மேற்கிலுள்ளதும் சுமார் 3000 பேர் உள்ளதுமான பட்டான் எனும் கிராமத்தையும் கல்மார்க் என்னுமிடத்தையும் மகேஜாதியினர் படித்து விட்டதாகக் கூறப்படுகிறது. பராமுலா நகரை (13000 குடி ஜனமுள்ளது) மகேஜாதியினர் பிடித்துள்ளதாகவும் 60 மைல் அகலமான பள்ளத்தாக்கின் வாயிலில் அவர்கள் நிற்பதாகவும் கூறப்படுகிறது. இங்குதான் ஸ்ரீநகர் இருக்கிறது.

இந்தியத் துருப்புகள் பட்டானின் பின்னாக நின்று எதிரிகளைத் தாக்குவதாகவும் எதிரிகள் பராமுலாவின் அரைவாசிப் பகுதியை எரித்து விட்டதாகவும் கல்மார்க்கிலுள்ள காஷ்மீர் மகாராஜாவின் மாளிகை தீக்கிரையாகப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

சுதந்திர இந்தியா, பாக்கிஸதான் பற்றி துருக்கியின் சந்தோஷம்

அங்காரா, நவ. 1

சுதந்திர நாடுகளுடன் இந்தியாவும், பாக்கிஸதானும் சேர்க்கப்பட்டிருப்பதை துருக்கி சந்தோஷத்துடன் வரவேற்றுள்ளது.

தலைவர் திரு. இஸ்மெயில் இனையுனுயின் பெரிய தேசிய சபையில பின்வருமாறு சொன்னார்:-

"ரஷியாவுடன் எங்கள் உறவுகள் அவ்வளவு நன்றாக இல்லை. நாம் எவ்வளவுதான ரஷியாவுடன் நல்லுறவை ஏற்படுத்தக் கொள்ள முயற்சிகள் செய்தும் நியாயமற்ற முறையில் ஸோவியத் யூனியனால் தடைபடுத்தப்பட்டுள்ளோம். புதிய பழைய காரியங்கள் யாவும் உண்மையற்ற முறையிலும், விரோதமான முறையிலும், பரிசீலனை செய்யப்பட்டு, பிரதிபலிக்கச் செய்யப்படுகின்றன.

"எங்கள் தேசத்திற்கு விரோதமான நடவடிக்கைகள் கூட எடுக்கப்படுகின்றன"

திரு. யனு மேலும் தொடர்ந்து கூறியதாவது:- "எங்கள் முக்கிய கவலை எங்கள் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளுவதாகையால், இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் தேசியப் பாதுகாப்புக்கென மிகப்பெருந் தொகையான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது"

ஹைதராபாத்தில் ஊரடங்குச் சட்டம்

ஹைதராபாத், நவ, 2

ஹைதராபாத் சர்க்கார் நடவடிக்கையை ஆட்சேபித்து அங்குள்ள இந்துமகா சபை நடத்திய ஊர்வலத்தை ஹைதராபாத் போலிஸார் கலைத்தபோது ஏற்பட்ட கலவரத்தில் இரண்டு போலிஸார் உட்பட ஏழுபேர்கள் காயமடைந்தனர் என்று கூறப்படுகிறது. இந்த பிரஜைகள் அதிகமாயுள்ள சமஸ்தானத்தில் இந்துமகா சபை தனது கோரிக்கைகளை நிஜாமிடம் சமர்ப்பிக்க அவரது மாளிகைக்குச் சென்றபோதுதான் போலிஸார் அவர்களைத் தடுத்தனர். இவர்களைத் தாக்க முனைந்த முஸ்லிம்களை போலிஸார் தடைசெய்துவிட்டனர் என்று கூறப்படுகிறது. இடையுள்ள சில பகுதிகளில் மூன்று நாட்களுக்கு 10 மணி நேர ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது

(ராய்ட்டர்)

ஆசிரியர்கள் சம்பளத் திட்டம் திருத்தப்படவேண்டும்

ஆனந்தாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் அமைச்சர் பேச்சு

கொழும்பு, நவ 2

ஆனந்தாக் கல்லூரி வருடாந்தபரிசளிப்புக்கொண்டாட்டம் திரு ஏ. பி. தெயுசூரியா தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் கல்லூரி அதிபர் பேசுகையில், சர்க்கார் பொது சேவையிலுள்ளவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத் திட்டங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களின் சம்பளத் திட்டங்களையும் கவர்ச்சியளிக்கத் தக்கவிதத்தில் வகுத்ததால்தான் தகுந்த தராதரமுடைய வர்கள் ஆசிரியர் வேலைகளை ஏற்றுக் கூடுமென்றும் ஆசிரியர்களின் சம்பளத்திட்டத்தை சர்க்கார் பொது உத்தியோகஸ்தர்களின் சம்பளத்திட்டத்திற்கேற்ப அமைக்க முடியாது விட்டால் சர்க்கார் உத்தியோகஸ்தர் சம்பளத் திட்டங்களை ஆசிரியர்கள் சம்பளத்திட்டங்களுக் கேற்ப குறைக்க வேண்டு மென்றும் கூறினார். இவர் தொடர்ந்து பேசுகையில் இலங்கையின் ஆசிரியர் குழாத்திலே தகுந்த பயிற்சியும் தராதரமுடையவர்கள் இருக்கவேண்டியது மிக மிக அவசியமென்றும் இலங்கையில் இப்பொழுது அதிகமாக இருக்கும் பொழிபெயர்ப்பு நூல்களோ மற்றவைகளோ அவசிய மானவையென்றும் இலங்கைக்கு ஏற்ற நூல்களை இலங்கையின் சூழ்நிலைகளை அனுசரித்து சுயமாக எழுதக்கூடிய தராதரமுடையவர்கள் ஆசிரியர்களாக வரவேண்டுமென்றும் கூறினார். திரு ஏ. தர்மதிலகா பரிசுகளை வழங்கினார்.

புதுடில்லி மகாநாட்டில் ஸ்ரீ ஜெயி பேச்சு

தொழிலாளர் கஷ்ட நிவர்த்திக்கு ஆலோசனைகள்

புதுடில்லி, நவ. 2

ஆசிய பிரதேச தொழிலாளர் மகாநாட்டில் மலேயாவிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி ஸ்ரீ ஜே. ஏ. ஜெயி பேசுகையில்! "தொழிலாளர்களை நல்ல முறையில் கவனிக்கப்பட வேண்டுமென்றும், யுத்த காலத்தில் யுத்த வீரர்களுக்கு பகிர்ந்தளித்தது போன்று உணவுப் பொருளகள், உடைகள் மற்றும் அவசியமான பொருள்கள் யாவும் திருப்திகரமான முறையில் இப்பொழுது சர்க்காரால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும், சமாதான காலத்தில் யுத்த சேவையிலுள்ளவர்கள் எவ்விதம் கவனிக்கப்படுவார்களோ அவ்விதம் தொழிலாளர் கவனிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் இப்பொழுதுள்ள தொழிலாளர் பிரச்னைகளையும் கஷ்டங்களையும் தீர்ப்பதற்கு சர்க்கார் அத்தியாவசியமான பொருள்களை எடுத்துக்கொண்டு தகுந்த முறைப்படி கொள் விலைக்கே தொழிலாளர்களுக்கு விநியோகிக்க வேண்டுமென்றும் கூறினார்.

சிங்கப்பூர் முதலாளிகள் பிரதிநிதி திரு. எல். கிரெஸன் பேசுகையில், சிங்கப்பூர் தொழிலாளரின் இன்றைய வேலை நிலைமைகளையும் யுத்த முற்கால நிலைமைகளையும் குறிப்பிட்டு பேசினார்.

சயாம் சர்க்கார் பிரதிநிதியின் பின் பாக்கிஸதான் தொழிலாளர் பிரதிநிதி ஜனாப் எம் ஏ. கான் பேசுகையில் பாக்கிஸதான் சனித்திருப்பினும் அது இந்திய தொழிலாளர் ஆதரவுடன் இருக்கவேண்டியதென்றும் அரசியலில் வித்தியாசங்கள் இருப்பினும் பொருளாதாரத் துறையில் வித்தியாசங்களில்லையென்றும் இந்திய-பாக்கிஸதான் தொழிலாளருக்குள் ஒத்துழைப்பு வேண்டுமென்றும் கூறினார். மகாநாடு இதன்பின் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது (அ-பிரஸ)

காலராவுக்கு மேலும் 374 பேர் பலி

செய்ரோ, நவ. 2

எகிப்திய சுகாதார மந்திரியின் காரியாலய அறிக்கையில் நேற்று 24 மணி நேரத்துக்குள்ளும் 374 பேர் காலராவால் பரணமடைந்தனர் என்றும், 759 பேர்களுக்கு புதிதாக காலரா வியாதி பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோடு மருதானை

புத்தம் புதிய படம்!!

இன்று காண்பிக்கப்படுவது!

மகத்தான 2-வது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சுவர்ணலதா-நஸீர் திறம்பட நடிக்கும்

வாமிக் - அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்

முன் இடம் தேடுங்கள்!

உலக உணவுச் சபைக் கூட்டம்

செவ்வாய்க்கிழமை நடக்கும்

வாஷிங்டன், நவ. 2

உலக உணவுச் சபை அதன் முதல் ஆரம்பக் கூட்டத்தை அடுத்த செவ்வாய்க்கிழமைக்கு வைத்துள்ளது. இக்கூட்டத்தில் இன்றுள்ள நெருக்கடியான நிலைமையில் கால் நடைகளுக்கு உணவுப் பொருள் எடுப்பது பற்றிய பிரச்னை, பசுக்கள் அவசியம் பண்ணைகளுக்கு வேண்டிய இயந்திர வகைகள் முதலியவை பற்றியும் 1948-ம் வருட அறுவடையில் அதிக பயன் பெறுவதற்கு எடுக்க வேண்டிய முறைகள் பற்றியும் உலகத்தில் இப்பொழுது மாறியுள்ள நிலைமைகளுக்கு ஏற்ப உணவுப் பொருள்கள் விவசாய சப்ளை முதலியவற்றை நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்படும். (ராய்ட்டர்)

விதானையார் கத்தியால் குத்தினார்!

ஊர்காவற்றுறை, அக் 31

எழுவை தீவு அயிற்றிய கிராமவிதானையார் வேலாயுதர் சதாசிவம் என்பவர் ஆதே ஊரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பெண் கனகம்மாவிற்கு சத்தியால் வெட்டிக் காயம் விளைத்ததாகக் குற்றம் சாட்டி தீவுப் பகுதி டி. ஆர். ஓ ஓர் வழக்கை ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்தார். மாஜிஸ்டிரேட் விசாரணையின் பின்னர் எதிரியை குற்றவாளியெனக் கண்டு இக்குற்றத்தை செய்த நேரத்தில் எதிரி புத்தி சுவாதீனமில்லாதிருந்தபடியால் வழக்குக் கொப்பியை கவர்னருக்கு அனுப்பி விட்டு எதிரியை பதில் வரும் வரைக்கும் ரிமாண்டில் வைக்கும்படி தீர்ப்புக் கூறினார். (ந-நி)

வள்ளத்தில் இறந்தவர்களின் எதிரொலி

தப்பியவர் கோர்ட்டில் கூறும் சம்பவம்

ஊர்காவற்றுறை. அக். 31

சென்ற ஜூலை மாதம் 25-ம் தேதி நயினாதீவிற்கும் அனலைதீவுக் கடலுக்குமிடையில் வள்ளம் கவிழ்ந்து 11 பேர் இறந்த செய்தி ஏற்கனவே 'சுதந்திரனில்' வெளியாகியுள்ளது. படகோட்டி ஆறுமுகம் ஐயாத்துரை மேலதிகமாகப் பிரயாணிகளை ஏற்றியும் கவலைனமாக படகை ஓட்டி 11 பேருக்கு மரணம் வருவித்ததாகவும் குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் வள்ளத்தில் சென்று உயிர் தப்பியவரில் ஒருவராகிய சின்னத் துரைக் குருக்கள் பரமேஸ்வரஐயர் கூறியதாவது:- சென்ற ஜூலை மாதம் 25-ம் தேதி நானும் கவிழ்ந்த வள்ளத்தில் பிரயாணஞ் செய்தேன். வள்ளத்தில் 15 அல்லது 16 பேர்கள் வரையிலிருந்தனர். வள்ளத்தில் ஜனங்கள் நெருக்கமாயிருக்கவில்லை. வள்ளம் வெள்ளப்படும் பொழுது கடல் அமைதியாகவிருந்தது. வள்ளம் நயினாதீவுக் கரையிலிருந்து வெளிப்பட்டு புளியந்தீவை நோக்கிச் சென்றது. இவ்வள்ளத்தில் பெண் பிரயாணிகள் ஓர் பக்கத்திலிருந்தனர் அவர்கள் ஆடம்பரமாக உடுத்திருந்தனர். புளியந்தீவுக் கரையோரத்திற்கு அரை மைல் அருகில் அடவிக்குக் கிட்ட வள்ளம் போய்க்கொண்டிருக்கும் பொழுது காற்றுபலமாக வீசத் தொடங்கியது. அது காரணமாக அலைகள் கிளம்பத் தொடங்கின. அலைகள் வள்ளத்தில் மோதித் தண்ணீரை வீசின. உடனே பெண் பிரயாணிகள் ஒரு பக்கம் சரிந்தனர்: வள்ளம் கவிழ்ந்தவிட்டது. எனக்கு நீந்தக் கூடிய ஓரளவு பயிற்சியுண்டு. ஆனால் என்னையும் வேறு சிலரையும் படகோட்டி கரை சேர்த்தான். மாஜிஸ்டிரேட் விசாரணை முடிந்ததும் தீர்ப்பை வருகிற நவம்பர் மாதம் 6-ம் தேதிக்கென ஒத்திவைத்தார். (ந-நி

நாட்டைவிட்டு வெளியேற 24 மணி நேர அவகாசம்

அமெரிக்க பத்திரிகை நிருபருக்கு கொடுக்கப்பட்டது

பெல்கிரேட், நவ. 2

"நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை நிருபர் திரு. ஆதர் மேயர் பிரான்டெல் என்பவரும் அவரது மனைவி மேரி லென்டரும் இருபத்து நான்குமணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று யூகோஸ்லேவியா உள்நாட்டு மந்திரி காரியாலயத்திலிருந்து நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. சர்க்கார் பத்திரிகை நிருபர்கள் காரியாலயத்தில் இதற்குக் காரணத்தை அவர் கேட்டபோது இவர் எழுதிய விஷயங்கள் இரு நாடுகளின் நல்லெண்ணத்தைப் பாதுகாப்பதாக இல்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஆட்சேபித்து இங்குள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு. கவென்டிஷகனன் யூகோஸ்லேவியா வெளிநாட்டு மந்திரிக்கு அறிவித்துள்ளார். இத் தம்பதிகள் தங்கியிருக்கும் ஹோட்டலிலிருந்து இன்று காலைக்குள் இவர்கள் வெளியேறி விடவேண்டுமென ஹோட்டல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ராய்ட்டர்)

நகர பஸ சர்வீஸ்

முனிஸிப்பல் மயமாக்கப் படலாம்

கொழும்பு, நவ. 2

கொழும்பு முனிஸிப்பல் சபையின் அடுத்த கூட்டத்தில் திரு டி. பி. சொய்ஸாவின் தீர்மானம் மொன்று எடுக்கப்பட இருக்கிறது. அத்தீர்மானத்தில், முனிஸிப்பல் சபைகளின் பிராந்தியங்களில் உள்ள பஸ் சர்வீஸ்களை முனிஸிப்பல் சபைகளே எடுத்து நடத்தக்கூடியதாக வசதிகள் இருப்பின் முனிஸிப்பல் சபைகள் எடுத்துநடத்துவதற்கு ஏற்றபடிபோக்குவரத்து மந்திரி சட்டங்களை அமுலுக்குக்கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாக அவர் கூறுகின்றார். மேலும் இப்பொழுதுள்ள போக்குவரத்து சாதனங்கள் நெருக்கடிகள் காரணமாக சைக்கிள்களில் இருவர் பிரயாணம் செய்வதை தடைசெய்யும் சட்டங்களையும் வாபஸ்பெற வேண்டுமென்று திரு டபிள்யூ ஜே.சொய்ஸா கூறுகின்றார்.

கொழும்பு நகருக்கு வெளியிடங்களிலிருந்து விற்பனைக்கு கள்ளு கொண்டுவருபவர்கள் அவற்றை கள்ளுண்போருக்கு தகுந்த முறையில் கொடுக்கின்றார்களில்லையென்றும் கள்ளை அதிகமாக்குவதற்கு பல பொருள்களையும் கள்ளுடன் கலந்து விற்கிறார்களென்றும் விற்பனைக்கு வரும் கள்ளு நகர பரிசோதகரால் சோதிக்கப்பட வேண்டுமென்றும் திரு கே. நாகரத்தினம் கொண்டுவரும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொச்சிக் கடைப் பகுதியில் இலவசப்பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒரு கட்டிடம்வேண்டுமென்றும், எல்லாத்தொழிலாளர், சிப்பந்திகள், உத்தியோகஸதர்களுக்கும் சர்க்கார் உத்தியோகஸதர்களுக்குள்ளது போன்று ஆஸபத்திரி வசதிகள், ரயில் பிரயாண சலுகைகள் எல்லாம் அளிக்கப்பட வேண்டுமென்றும் திரு வி ஏ சுகததாஸா தீர்மானங்கள் கொண்டுவருவார்.

கலா விருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம், நவ. 2

நன்னோக்கமுடைய பலரின் முயற்சியால் யாழ்ப்பாண இளைஞர்களைச் சங்கீதம், சித்திரம், நடனம் முதலிய அருங்கலைகளில் பயிற்றுவதற்கு கலா விருத்திச் சங்கம் 24-10-47 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. சங்கத் தலைவர் செல்வி ஆர். ஆர். செல்லையா காரியதரிசி, திரு. நா. தம்பிரத்தினம் தனாதிகாரி, திரு எஸ். செல்வராஜா, நிர்வாக சபையோர் ஸ்ரீமதிகள் நாதன், பொன்னுத்துரை, நாகராஜா, செல்விகள் செல்வத்துரை, கந்தப்பு, சுப்பையா திருவாளர்கள் ஸ்ரீகாந்தா, அம்பிகை பாகன் ஆவர், பிள்ளைகளின் போக்குவரவு வசதி கருதி பெரியகடை பாரதி பாஷிய விதத்தியாசாலையில் தற்காலிகமாக ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் காலை 9 மணி முதல் தேவாரம், சங்கீதம் இலவசமாய் சொல்லி வைக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக 1947-ம் ஞு நவம்பர் மீ 3உ இந்த பத்திரிகை 189A, தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்ட்ரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

மானிட, விலங்கின, தாவர வர்க்கங்களை நிர்மூலமாக்கும் பயங்கர ஆயுதங்கள்

உற்பத்தி செய்வதில் எல்லா தேசங்களின் ஆர்வம்

அமெரிக்க கடற்படை அதிகாரி கூறும் விபரம்

நியூயார்க், அக். 28

"மனிதர், விலங்கு, தாவரம் ஆகியவை ஒன்றுமே பூமியில் இல்லாதபடி நிர்மூலமாக்க வல்ல நீண்ட தூரம் பாயும் ஆயுதங்கள் செய்வதற்கு அநேக தேசங்கள் திட்டம் வகுத்துள்ளன" என்று "யுனைடெட் நேஷன்ஸ் வொர்ல்டு" என்ற பத்திரிகையில், அமெரிக்க கடற் படையிலிருந்து ரிட்டயராகியிருக்கும் ரியர் அட்மிரல் எலலிஸ் என். ஸக் கோரியாஸ எழுதியிருக்கிறார். மேலும் அவர் அதில் கூறியிருப்பதாவது:-

இயற்கை உயிர் சாஸதிரம், கிருமிகள் சாஸதிரம், சீதோஷ்ண ஸ்திதி சம்பந்தமான சாஸதிரம் இவைகளின் உதவி கொண்டு, சிருஷ்டிக்கப்படும் இந்த நூதன ஆயுதங்கள் அமெக்காவின் ஏகபோக பாத்தியதை அல்ல. எல்லா தேசங்களும் இவைகளை சிருஷ்டிக்க ஆரம்பித்துவிட்டன. வாயு மண்டலத்துக் கப்பாலிருக்கும் பிரதேசங்களில் வியாபித்திருக்கும் கிரணங்கள்பற்றி ரஷியர்கள் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கின்றனர். "ராக்கெட்" வெடிகுண்டுகள் அபிவிருத்தி பற்றி அவர்கள் ஆராய்ச்சி முன்னேற்றம் அடைந்து வருகிறது.

பிரிட்டன், "வழிகாட்டப்பட்ட எரி ஆயுதங்கள்" சிருஷ்டியில முன்னேறி வருகிறது.

அமெரிக்கா புதிதாய் அணுகுண்டை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கிறது. ஜப்பானில் வீசப்பட்ட அணுகுண்டைப் போல், இவைகள் 50 தடவை அதிக சக்தி வாய்ந்தவை இது தவிர விமான மூலமோ அல்லது "ராக்கெட்டுகள்" மூலமோ பரப்பக்கூடிய ஒரு இரகசிய கிருமிகள் நிறைந்த ஆயுதம் அவர்கள் செய்திருக்கின்றனர். இவ்விதமான ஆயுதங்களை பிரயோகித்தால் எவ்விதமான உயிர்த்தோற்றமும், ஆயிர வருஷங்களுக்கு பூமியில் தோன்றாது.

ஸ்தல ஸதாபனங்களும் தொழிற் சங்கமும்

திரு. ஹல்ஸனின் புதிய ஆலோசனைகள

கொழும்பு, நவ. 3

கொழும்பு தொழிற் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் அர்பன் சபைகள் உத்தியோகஸ்தர் சங்கக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் இலங்கை சர்க்கார் தொழிற் சங்க ஆலோசகர் திரு டி' ஹல்ஸன் பேசுகையில் ஸ்தலஸ்தாபன சர்க்கார் சர்வீஸதொழிலாளர் உத்தியோகஸதர்களுக்கு ஒரு தேசிய சபை இருக்க வேணடுமென்றும் அதில் தேசியம், மாகாணம், ஸதல பகுதி ஆக மூன்று பிரிவுகள் வேணடுமென்றும், இலங்கையில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆக நான்கு மாகாணங்கள் இருக்க வேண்டுமென்றும் ஆலோசனை தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து பேசுகையில பிரதமர் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கைபற்றி குறிப்பிட்டு, அர்பன் சபைகளுடன் மட்டும் தொழிற் சங்கங்களை ஆக்குவது அதிக பயனளிக்க மாட்டாதென்றும், முழு ஸதல ஸதாபன சர்க்கார் சர்வீஸிலும் தொழிற சங்க ஸதலஸதாபனத்தை அமைக்க வேண்டுமென்றும கூறினார்.